உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-173

ஜனவரி 16-31 2024

அயோத்தியா ராமர் கோவில் திறப்பு சிறப்பிதழ்



e-magazine

e-magazine

## அயோத்தியா தீர்ப்பை கேட்க வந்த அனுமன்

# ராமனின் பெருமைகள்

## ராமன் ஜாதகத்தை வழிபட்டால் கிடைக்கும் பலன்

ராமநவமி, பங்குனி அல்லது சித்திரை மாதம் வளர்பிறை நவமி திதியில் அமைகிறது. ராமபிரானின் ஜனன காலத்தில் ஐந்து கிரகங்கள் உச்சம் பெற்று விளங்கின. அதனால் ராமசந்திரனின் ஜாதகத்தை வீட்டில் வைத்து பூஜித்தால் நன்மை பயக்கும் என்பது ஐதீகம். ஸ்ரீராமநவமி உற்சவம் இருவிதமாகக் கொண்டாடப்படுகிறது. ஒன்று, ஜனன உற்சவம் மற்றொன்று கர்ப்ப உற்சவம்.

## வனவாசம் சென்ற இடங்களில் இராமனின் பெயர்கள்

சர்குஜா மாவட்டம் சட்டிஸ்கர் மாநிலத்தின் வட பகுதியில் அமைந்திருக்கிறது. உத்தரப்பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களை எல்லைகளாககொண்டது. இம்மாவட்டத்தின் 50சதவீத நிலப்பரப்பு பழங்குடி இனமக்கள் வசிக்கும் பகுதியாகவே காணப்படுகிறது.


தேயிலை உற்பத்தியில் இந்த சர்குஜா மற்றும் ஜஷ்பூர் மாவட்டங்கள் சாதகமான சூழலை பெற்றிருக்கின்றன. இந்த மாவட்டத்தோடு சம்பந்தப்பட்ட பல்வேறு புராணக்கதைகள் இப்பிரதேசத்தில் சொல்லப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று ராமர் 14 ஆண்டுகள் வனவாசம் மேற்கொள்ள நேர்ந்தபோது இப்பகுதிக்கு வருகை தந்தார் என்பதாகும். எனவே இந்த பகுதியில் ராமர், லட்சுமணர் மற்றும் சீதாதேவியின் பெயரின் அழைக்கப்படும் ஊர்களை பார்க்க முடிகிறது. ராம்கர், சீதாபெங்க்ரா மற்றும் லட்சுமண்கர் போன்ற இடங்களை உதாரணமாக சொல்லலாம்.

## ராமநாமத்தால் அனுமனுக்கு கிடைத்த பலன்

ராமபிரானாலேயே சிறந்த பக்தன் என்று போற்றப்பட்ட அனுமனுக்கு வாக்கு, வன்மை, வீரம், சாதுரியம் என அனைத்துமே ராமநாமத்தின் மகிமையால்தான் வந்தது என்று கூறலாம்.

## சந்திரனைப் போன்று குளிர்ந்தவன் கருணையாளன்

இராமன் என்பதற்கு முழுமையாக எழுதுவர். இரா என்றால் இரவு. மன் என்றால் தலைவன். இரவுக்கு தலைவன் சந்திரன். சந்திரனைப் போல் குளிர்ந்த முகத்துடன் அருள்பவர் என்பதே ராமனின் பொருள். ஆம்... அவர் பறவைக்கும், குரங்குகளுக்கும், அணிலுக்கும் கூட அருள் செய்தவர். ராவணன் ஆயுதம் இழந்து நின்ற போது உயிர் பிச்சை தந்த கருணையாளர்.



ஆன்மிகமலர்
aanmeegamalar.com
e-magazine
aanmeegamalar.com

# ஸ்ரீராமநவமி விரதம் எப்படி இருப்பது?

ஸ்ரீராமநவமி அன்று ராமர் படத்தை அலங்கரித்து மஞ்சள் வஸ்திரம் சாத்தி வழிபட வேண்டும். பின்னர் மனதை ஒரு நிலைப்படுத்தி ஸ்ரீராமஜெயம் என்று 108, 1008 என அவரவர் வசதிப்படி எழுதலாம்.

நீர் மோர் பானகம் ஆகியவற்றோடு சிறப்பான விருந்து சமையலும் செய்து ராமருக்குப் படைக்க வேண்டும். நிறைவாக வடையையும், வெற்றிலையையும் அனுமனுக்குப் படைக்க வேண்டும்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

பின்னர் விரதத்தை நிறைவு செய்துவிட்டேன். நல்லவை யாவும் அருளிக் காப்பாயாக! என்று வேண்டிக்கொண்டு உணவு அருந்தலாம். அன்றைய தினம் கட்டாயம் நீர் மோரும், பானகமும் பருக வேண்டும். அன்று இரவு லேசான உணவாக எடுத்துக்கொள்ளுதல் நலம்.

இப்படி ஸ்ரீராமநவமி விரதத்தை கடைப்பிடித்து வந்தால் மனநிம்மிதி, வெற்றி, செல்வம் ஆகியவை பெருகும். இதே விரதத்தை ஜனனகால விரதமாக (இதனை கல்யாண விரதம் எனவும் சொல்வதுண்டு) அனுஷ்டிக்க நினைப்பவர்கள் ஸ்ரீராமநவமியிலிருந்து தொடங்கி ஒன்பது நாட்கள் மேற்சொன்னபடி விரதம் இருக்கவேண்டும்.

பத்தாம் நாளன்று காலை ராமருக்கு வழிபாடுகள் செய்து கல்யாண சமையல்போல விருந்துணவு செய்து படைக்க வேண்டும். நிறைவில் வடையும் வெற்றிலையும் அனுமனுக்கு சமர்ப்பணம் செய்து விரதத்தை முடிக்க வேண்டும். இந்த வகையில் விரதத்தைக் கடைப்பிடித்தால் திருமணத் தடைகள் நீங்கும். தம்பதியரிடையே ஒற்றுமை ஏற்படும். மனக்குழப்பங்கள் தீர்ந்து வாழ்வில் இன்பம் பெருகும்.

# லட்சுமணன் மீனைப் போன்றவன்: கம்பர்

14 வருடம் உண்ணாமல், உறங்காமல், நைஷ்டிக பிரும்மச்சாரியாக இருப்பவனால் தான் இந்திரஜித் மரணமடைவான் என்பது வரம். லட்சுமணன் அது போலவே இருந்தான். லட்சுமணன் இல்லாவிட்டால் ராமனாலுமே இந்திரஜித்தை வென்றிருக்க முடியாது.

இலக்குவனே சிறந்தவன் என்று பரதனே ஒப்புக்கொள்கிறான் என்று கம்பன் கூறுகிறான். குளத்தில் நீர் இருக்கும் வரை மீனும் பாசியும் இருக்கும். ஆனால் பாசி, நீர் வற்றியவுடன் மேலும் இரண்டு மூன்று நாட்கள் வாழும். ஆனால் மீனோ நீர்

பிரிந்தவுடன் தானும் இறந்துவிடும். சீதை கூட இராமனை விட்டு 12 மாதம் பிரிந்தாள். ஆனால் இலக்குவன் ஒரு கணம் கூட பிரியவில்லை. அவன் மீன் போன்றவன் என்று 'நீருள எனின் உள மீனும் நீலமும்..' என்கிற கம்பன் பாடல் இதனை உணர்த்துகிறது.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



# ராமபிரானின் காலடி பதிந்த புனித இடங்கள்

இந்த பூமியில் காடுகளும், மலைகளும், நதிகளும் இருக்கும் வரை, இந்த மண்ணின் மக்களிடம் ராமாயணம் நிலைத்து நிற்கும். அயோத்தியில் பிறந்த ராமர், 14 ஆண்டுகள் வனவாசமாக காட்டிற்குள் நுழைந்தார். அவர் காட்டின் பல இடங்களுக்கு பயணித்தார். ஒரு கட்டத்தில் சீதையை ராவணன் கடத்திச் சென்றதன் விளைவாக, அவர் பாரத தேசத்தின் தென்பகுதியில் உள்ள வனத்திற்குள்ளும் பயணிக்க வேண்டியநிலை ஏற்பட்டது. அங்கிருந்து சேது சமுத்திரத்தில் பாலம் அமைத்து இலங்கை சென்றார். இவ்வளவு இடங்களையும் அவர் நடந்தே கடந்தார் என்பதுதான், இங்கே நாம் கவனிக்க வேண்டியது. அப்படியானால் பாரத தேசத்தின் பெரும் பகுதிகளில் ராமரின் காலடி பதிந்திருக்கலாம் என்பதே, நம்முடைய பெரும் பாக்கியம்தான். அப்படி ராமபிரானின் காலடித் தடங்கள் பதிந்த இடங்களில் சில முக்கிய பகுதிகளை இங்கே பார்க்கலாம்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

## அயோத்தி

ராம ஜென்ம பூமி என்று அழைக்கப்படும் இந்த இடம்தான், ராமர் பிறந்த ஊர். சிறு பிள்ளையாக அவர் விளையாடியதும், 14 ஆண்டுகால வனவாசத்திற்குப் பிறகு, அவர் அரியணையில் அமர்ந்து அரசாட்சி செய்ததும் இந்த இடம்தான். தமிழில் ராமாயணத்தை எழுதிய கம்பர்,




வடநாட்டில் ராமாயணத்தை எழுதிய துளசிதாசர், மகாத்மாகாந்தி போன்றவர்களுக்கு உத்வேகம் அளித்த, ராம நாமத்தின் ஊற்றுக்கண் இந்த இடமாகும். வாரணாசியில் இருந்து 189 கிலோமீட்டர் தூரத்திலும், லக்னோவில் இருந்து 128 கிலோமீட்டர் தொலைவிலும் இருக்கிறது, அயோத்தி. வாரணாசியில் இருந்து லக்னோ செல்லும் ரெயில் மார்க்கத்தில் இருக்கிறது அயோத்தி ரெயில் நிலையம்.

## பக்ஸர்

விஸ்வாமித்திரர், தன்னுடைய யாகத்திற்கு




இடையூறாக இருக்கும் தாடகையை அழிப்பதற்காக ராமரையும், லட்சுமணனையும் காட்டிற்கு அழைத்துச் சென்றார். அப்போது அவர்கள் இருவருக்கும் பலை, அதிபலை என்ற முக்கியமான இரண்டு மந்திரங்களை உபதேசித்த இடம் இதுவாகும். 'சித்தாசிரமம்', 'வேத சிரா', 'வேத கர்ப்பா', 'க்ருஷ்' என்று வேறு பெயர்களாலும் இந்த இடம் அழைக்கப்படுகிறது. பாட்னாவில் இருந்து மொகல்சராய் செல்லும் ரெயில் மார்க்கத்தில் முக்கியமான ரெயில்நிலையம், பக்ஸர்.

## அகல்யாசிரமம்

கவுதம முனிவரின் மனைவி அகலிகை. இவள் மீது தேவர்களின் தலைவனான இந்திரனுக்கு ஆசை இருந்தது. இதனால் கவுதம முனிவர்



e-magazine aanmeegamalar.com



இல்லாத நேரத்தில், அவரது தோற்றத்தில் அகலிகையிடம் நெருங்கினான் இந்திரன். அந்த நேரத்தில் தன் குடிலுக்கு திரும்பிய கவுதமர், இந்திரனுக்கு கொடும் சாபம் கொடுத்தார். அதோடு கணவனை உணர்ந்து கொள்ளாதவள் என்று குற்றம் சாட்டி, அகலிகைக்கும் கல்லாக மாறும் சாபத்தை அளித்தார். பல நூறு ஆண்டுகளாக கல்லாகக் கிடந்த அகலிகை, காட்டிற்குள் வனவாசம் வந்த ராமரின் காலடி பட்டு, சாப விமோசனம் பெற்றாள். அந்த இடம் இதுவாகும். சீதாமடிதர்பங்கா ரெயில் மார்க்கத்தில், கம்தவுல் என்ற ரெயில் நிலையத்தில் இறங்கி, மேற்கே 15 மைல் தொலைவு சென்றால் அஹியாரி என்ற இடம் உள்ளது. இங்கு கவுதம குண்ட் என்ற இடம் இருக்கிறது. இங்கிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் அகல்யா குண்ட் என்ற, அகல்யாசிரமம் உள்ளது.

## ஜனக்பூர்

மிதிலை நாட்டை ஆண்ட ஜனகரின், அர சாட்சி நடைபெற்ற இடம் இந்த ஜனக்பூர். இங்கிருந்த பெரிய மைதானத்தில்தான், சீதை யை மணப்பதற்காக சிவ தனுசை ராமர் முறித்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. சீதாமடி என்ற இடத் தில் இருந்து சுமார் 40 கிலோமீட்டர் தூரத்தில் ஜனக்பூர் உள்ளது.



## வால்மீகி

வால்மீகி ஆசிரமம் பெரும் வழிப்பறி கொள்ளையனாக இருந்து, பின் மனம் மாறி



ராமபிரானின் காவி யத்தை எழுதிய வால்மீகி முனிவர் வாழ்ந்த இடம் இதுவாகும். பிரயாகைக்கு தெற்கே 30 கிலோமீட்டர் தூரத்தில் இந்த இடம் உள் ளது. மேலும் இரு இடங்களையும் வால்மீகி ஆசிர மமாகக் கூறுகின்றனர். கான்பூர் அருகே பிடூரில் உள்ள கங்கை கரையிலும், சீதாமடி அருகேயும் வால்மீகி முனிவர் வசித்ததாக சொல்லப்படுகிறது.

## சித்திரக்கூடம்

ராமர் வனவாசத்தில் முக்கிய இடம் இது. ராமர் 14 ஆண்டுகள் வனவாசம் சென்ற போது, சீதை



மற்றும் லட்சுமணனுடன் இந்த சித்திரக்கூடம் பகுதியில் சில மாதங்கள் தங்கியிருந்தார். அங்கு அனுசுயா, அத்ரி, மார்க்கண்டேயர் ஆகிய ரிஷி பெருமக்களுடன் ராமரும் தவம் இயற்றியதாக ராமாணயம் சொல்கிறது. அமாவாசை, பவுர்ணமி, தீபாவளி, மகரசங்கராந்தி, ராமநவமி போன்ற நாட்களில் சித்திரக்கூடத்தில் மக்கள், பெரும் கூட்டமாக சேர்ந்து, இங்கு பாயும் மந்தாகினி ஆற்றில் புனித நீராடி ராமபிரானை வழிபடுவது வழக்கம். அலகாபாத்தில் இருந்து ஜபல்பூர் செல்லும் ரெயில் மார்க்கத்தில் மாணிக்பூர் ஜங்ஷன் உள்ளது. இங்கிருந்து 36 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் சித்திரக்கூடம் ரெயில் நிலையத்தில் இறங்கி இந்த பகுதிக்குச் செல்லலாம்.

e-magazine
aanmeegamalar.com

## ராம்டேக்

'டேகரி' என்றால் சிறிய மலை என்று பொருள்.



'டேக்' என்றால் அபயம் தந்து ஆதரிப்பது என்றும் பொருள்படும். இது 'ராமகிரி' என்றும் அழைக்கப்படுகிறது. வனவாசனத்தின் போது, ராமர், லட்சுமணன், சீதை ஆகிய மூவரும் இங்கு சிறிது காலம் தங்கி இருந்தனர். ஆதலால் இது புண்ணிய தலமாகக் கருதப்படுகிறது. மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் இருந்து ஜபல்பூர் செல்லும் வழியில் தும்பர் என்ற கிராமம் உள்ளது. இதன் அருகில்தான், இந்த ராம்டேக் இருக்கிறது. இது நாக்பூரில் இருந்து சுமார் 46 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

## பஞ்சவடி


ராமாயணத்தில் கோதாவரியை ராமர் அடைந்தது விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டுள்ளது.



இங்குள்ள பஞ்சவடி மிக முக்கியமான இடம். அயோத்தியிலிருந்து தெற்கு நோக்கி பயணித்த ராமபிரான், சில முனிவர்களின் வேண்டுகோள்படி ஓரிடத்தில் தங்க சம்மதிக்கிறார். அது ஐந்து ஆலமரக்கூட்டம் இருக்கும் இடம். அதனால் அது 'பஞ்சவடி' என்று அழைக்கப்பட்டது. இங்கிருந்துதான் சீதையை, ராவணன் கடத்திச் சென்றான் என்று ராமாயணம் சொல்கிறது. இங்கிருந்து 25 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள திரயம்பகேஸ்வரம் என்ற இடத்தில் இருந்துதான் கோதாவரி நதி தோன்றுகிறது. மும்பையில் இருந்து புசாவல் செல்லும் ரெயில் தடத்தில், நாசிக் ரோட் என்ற பெரிய ரெயில் நிலை யம் உள்ளது. இங்கிருந்து 8 கிலோமீட்டர் தொலை வில் பஞ்சவடி இருக்கிறது.

## சபரி ஆசிரமம்

சபரி என்ற மூதாட்டியின் பக்திக்காக, அவள்








எச்சில்படுத்திக் கொடுத்த கனியைக் கூட அன்போடு ராமபிரான் சுவைத்து சாப்பிட்ட இடம் இதுவாகும். விஜயநகர சாம்ராஜ்ஜியத்தில் பிரசித்தி பெற்ற புராதன நகரம், ஹம்பி. இந்நகரின் மத்தியில் விருபாட்சர் கோவில் உள்ளது. இங்கே துங்கபத்ரா நதி பாய்கிறது. இதை 'சக்கர தீர்த்தம்' என்றும் சொல்வர். இதன் அருகே உள்ள மலையில் ராமர் கோவில்




ஒன்று உள்ளது. இந்த மலை 'மதங்க பர்வதம்' என்று அழைக்கப்படுகிறது. இங்கேதான் மதங்க மாமுனிவர் வசித்து வந்தார். இவர் ஆசிரமத்திற்கு அருகேதான் சபரி வசித்து வந்ததாக ராமாயணம் வர்ணிக்கிறது.

## கிஷ்கிந்தா

வாலியும், அவன் இறந்த பிறகு சுக்ரீவனும் அரசாட்சி செய்த வானர நகரம் இதுவாகும். கர்நாடகத்தில் இருந்து ஹூப்ளி கதக் பெல்லாரி ரெயில் வழித்தடத்தில் அமைந்த முக்கியமான ரெயில் நிலையம், ஹான்ஸ்பேட். இது பெல்லாரி யிலிருந்து 65 கிலோமீட்டர் தூரத்திலும், ஹூப்ளியில் இருந்து 145 கிலோமீட்டர் தொலைவிலும், கதக்கிலிருந்து 85 கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது. ஹம்பியில் இருந்து 14 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஹான்ஸ்பேட் என்ற இடத்தின் அருகேதான், கிஷ்கிந்தா ராஜ்யம் அமைந்திருந்ததாக வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## ராமேஸ்வரம்

ராமபிரான் இங்கிருந்துதான், இலங்கைக்குச் செல்ல பாலம் அமைத்தார். பின்னர் வெற்றிக்கொடி



நாட்டி திரும்பியதும், இங்குள்ள மணலில் சிவ லிங்கம் ஒன்றை செய்து வழிபட்டார். அந்த மணல் லிங்கம்தான், ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாதர் கோவிலின் மூலவராக இன்றளவும் உள்ளதாக தல புராணம் தெரிவிக்கிறது. ராமேஸ்வரத்திற்கு மதுரையில் இருந்தும், சென்னையில் இருந்தும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ரெயில், பஸ்வசதி உள்ளது.

e-magazine
aanmeegamalar.com

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



GET IT ON Google Play


ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்


# ஸ்ரீ ராமன்


## காஞ்சி மஹா பெரியவா

‘ராமன்’ என்றாலே ஆனந்தமாக இருப்பவன் என்று அர்த்தம்; மற்றவர்களுக்கு ஆனந்தத்தைத் தருகிறவன் என்று அர்த்தம். எத்தனை விதமான துக்கங்கள் வந்தாலும் அதனால் மனம் சலனம் அடையாமல், ஆனந்தமாக தர்மத்தையே அநுசரித்துக்கொண்டு ஒருத்தன் இருந்தான் என்றால், அது ஸ்ரீ ராமன்தான். வெளிப்பார்வைக்கு அவன் துக்கப்பட்டதாகத் தெரிந்தாலும், உள்ளுக் குள்ளேயே ஆனந்தமாகவே இருந்தான்.

சுக துக்கங்களில் சலனமடையாமல், தான் ஆனந்தமாக இருந்துகொண்டு, மற்றவர்களுக்கும் ஆனந்தத்தை ஊட்டுவது தான் யோகம். அப்படியிருப்பவனே யோகி. இவ்வாறு மனசு அலையாமல் கட்டிப்போடுவதற்குச் சாமானிய மனிதர்களுக்கான வழி வேத சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற தர்மங்களை ஒழுக்கத்தோடு, கட்டுப்பாட்டோடு பின்பற்றி வாழ்வது தான். சொந்த விருப்பு வெறுப்புக்கு இலக்காகாமல் வேதம்







விதிக்கிற தர்மப்படி வாழ ஆரம்பித்துவிட்டால், தானாகவே மனஸின் சஞ்சலம் குறைந்து, அது தெளிய ஆரம்பிக்கும். இந்தத் தெளிவால் மனசு எப்போதும் ஆனந்தமாக, லேசாக இருக்கும். இந்த சித்த சுத்தி மோக்ஷத்திலேயே கொண்டு சேர்த்துவிடும்.

ஜனங்களுக்கெல்லாம் ஒரு பெரிய உதாரணமாக வேத தர்மங்களை அப்படியே அநுசரித்து ஆனந்தமாக வாழ்ந்து காட்டுவதற்காக ஸ்ரீமந் நாராயணனே ராமனாக வந்தார். ராம வாக்கியத்தை எங்கே பார்த்தாலும், ‘இது என் அபிப்பிராயம்’ என்று சொல்லவே மாட்டார். ‘ரிஷிகள் இப்படிச் சொல்கிறார்கள்; சாஸ்திரம் இப்படிச் சொல்கிறது’ என்றே அடக்கமாகச் சொல்வார். சகல வேதங்களின் பயனாக அறியப்படவேண்டிய பரமபுருஷன் எவனோ, அவனே அந்த வேத தர்மத்துக்கு முழுக்க முழுக்க கட்டுப்பட்டு, அப்படிக் கட்டுப்பட்டு இருப்பதிலேயே ஆனந்தம் இருக்கிறது என்று காட்டிக்கொண்டு, ராமனாக வேஷம் போட்டுக் கொண்டு வாழ்ந்தான்.

“ராவணன் ஸீதையைத் தூக்கிக்கொண்டு போனபோது, ஒரே மைல் தூரத்திலிருந்த ராமனுக்கு ஸீதை போட்ட கூச்சல் காதில் விழவில்லையாம். அப்படிப்பட்டவனை இப்போது பக்தர்கள் கூப்பிட்டால் என்ன பிரயோஜனம்?” என்று கேலி செய்து கேட்டவர்கள், எழுதியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள்

ராமனாக இந்த லோகத்தில் வாழ்ந்தபோது மனுஷ்ய வேஷத்தில் இருந்தான்; மநுஷ்யர்களைப் போலவே வாழ்ந்தான் என்பதை மறந்து பேசு கிறார்கள்.

ஒரு நாடகம் நடக்கிறது. ராமாயண நாடகம் தான். அதில் லவ குசர்களை வால்மீகி ராமனிடம் அழைத்து வருகிறார். ராஜபார்ட் ராமஸ்வாமி அய்யங்கார் ராமராக வேஷம் போட்டுக் கொண் டிருக்கிறார். அவருடைய சொந்தப் பிள்ளைகளே நாடகத்தில் லவ குசர்களாக நடிக்கிறார்கள். நாடக ராமன் வால்மீகியைப் பார்த்து 'இந்தக் குழந்தைகள் யார்?' என்று கேட்கிறார்.

ராமஸ்வாமி அய்யங்காருக்குத் தம்மு டைய பிள்ளைகளையே அடையாளம் தெரியவில்லை என்று நாடகம் பார்க் கிறவர்கள் கேலி செய்யலாமா? நாடக வால்மீகி, 'இவர்கள் ராஜபார்ட் ராமஸ்வாமி அய்யங்காரின் பிள்ளைகள்; நீங்கள் தானே அந்த ராமஸ்வாமி அய்யங்கார்!' என்று பதில் சொன்னால் எத்தனை ரஸாபாஸமாக இருக்கும்? வாஸ்தவத்தில் இருப்பதை, வாஸ்தவத்தில் தெரிந்ததை, நாடகத்தில் இல்லாததாக, தெரியாததாகத்தான் நடிக்க வேண்டும்.

ஸ்ரீ ராமன் பூலோகத்தில் வாழ்ந்தபோது, இப் படித்தான் மநுஷ்ய வேஷம் போட்டுக் கொண்டு தம் வாஸ்தவமான சக்தியையும் ஞானத்தையும் மறைத்துக் கொண்டு வாழ்ந்தார்.

வேதப் பொருளான பரமாத்மாதசரத னின் குழந்தையாக வேஷம் போட்டுக் கொண்டவுடன், வேதமும் வால்மீகியின் குழந்தையாக, ராமாயணமாக வந்துவிட் டது. அந்த ராமாயணம் முழுக்க எங்கே பார்த்தாலும் தர்மத்தைத்தான் சொல்லி யிருக்கிறது. ஊருக்குப் போகிற குழந்தைக்குத் தாயார் பட்சணம் செய்து தருகிற வழக்கப்படி கௌசல்யா தேவி காட்டுக்குப் போகிற ராமனுக்குப் பதினாலு வருஷங்களும் கெட்டுப்போகாதபட்ச ணமாக இந்தத் தர்மத்தைதான் கட்டிக்கொடுத் தாள். 'ராகவா, நீ எந்த தர்மத்தை த்ருதியோடு, அதாவது தைரியத்தோடு, நியமத் தோடு அநுசரிக் கிறாயோ, அந்தத் தர்மம் உன்னை ரக்ஷிக்கும்' என ஆசீர்வாத பட்சணம் கொடுத்தாள்.

நியமம், அதாவது தனது என்ற வெறுப்பு விருப்பு இல்லாமல் சாஸ்திரத்துக்குக் கட்டுப்படுவது முக்கியம். அதே போல் தைரியம் முக்கியம். ஒருத்தர் பரிகாசம் பண்ணுகிறார் என்று தர்மத்தை விடக்கூடாது. ராமனை சாக்ஷாத் லக்ஷ்மணனே பரிகசித்தான். 'அண்ணா! நீ தர்மம், தர்மம் என்று எதையோ கட்டிக் கொண்டு அழுவதால்தான் இத்தனை கஷ்டங்களும் வந்திருக்கின்றன. அதை விட்டுத் தள்ளு. தசரதன் மேல் யுத்தம் செய்து ராஜ்யத்தை உனக்கு நான் ஸ்வீகரித்துத் தர அனுமதி தா' என்று அன்பு மிகுதியால் சொன்னான். ஆனால் ராமன், யார் எது சொன்னாலும் பொருட்படுத்தாமல் தர்மத்தையே காத்தான். கடைசியில் அது அவனைக்





காத்தது. தர்மம் தலை காத்தது. ராவணனுக்குப் பத்து தலை இருந்தும் அதர்மத்தால் கடைசியில் அத்தனை தலைகளும் உருண்டு விழுந்தன. ஸ்ரீராமன் இன்றும், 'ராமோ விக்ரஹவான் தர்ம:' என்றபடி தர்மத்தில் தலைசிறந்து தர்ம ஸ்வரூபமாக அநுக்கிரகம் செய்து வருகிறான்.

சாக்ஷாத் ஸ்ரீ ராமனை லட்சியமாகக் கொண்டு "ராம ராம" என்று மனஸாரச் சொல்லிக்கொண்டே இருக்கிறவர்களுக்குச் சித்த மலங்கள் எல்லாம் விலகும். தர்மத்தை விட்டு எந்நாளும் விலகாமல் அவர்கள் ஆனந்தமாக வாழ்வார்கள்.

– தெய்வத்தின் குரல்
(முதல் பகுதி)

e-magazine
aanmeegamalar.com

# அயோத்தியா எங்கு உள்ளது? தொடர்புடைய புனித இடங்கள்




உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவிலிருந்து கோரக்பூர் செல்லும் வழியில் அமைந்துள்ளது அயோத்தி. இதன் அருகில் பெய்சாபாத் எனும் நகரமும் அமைந்துள்ளது. அயோத்தி இந்துக்களின் புனித பூமியாகவும் போற்றப்படுகிறது. மகா விஷ்ணுவின் மனித அவதாரமான ராமர் இங்குதான் பிறந்து வளர்ந்துள்ளார். இதனால் இந்த நகரம் வைகுண்டத்தின் ஒருபாதியாகவே புராணங்கள் குறிப்பிடுகிறது.

இந்த அயோத்தியா மிகப்பெரிய நதியின் கரையில் அமைந்திருக்கிறது, இந்த நதிக்கு சரயு என்று பெயர், இராமரின் பிறந்த நாளான இராம நவமி அன்று ஏராளமான பக்தர்கள் அயோத்தியின் சரயு நதியில் இறங்கிக் குளிக்கிறார்கள். தசரத மன்னன் பிள்ளை வரம் வேண்டி யாகம் செய்ததும், ராமன் பசியே எடுக்காமலிருக்க "பலா, அதிபலா" மந்திரங்களை உபதேசம் பெற்றதும் இந்த சரயு நதிக்கரையில்தான்.

சரயு கங்கையுடன் இணையும் பகுதியில் ஒரு சோலை இருந்தது இந்த சோலைக்கு ஒரு வரலாறு உள்ளதாக இராம காதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. "ஒரு சமயம் சிவபெருமான் யோக நிலையில் இருந்தார். அப்போது மன்மதன் தனது பாணங்களைக் கொண்டு காமக் கணைகளை ஏவ, சிவபெருமான் சினந்து, அவனைத் தன் நெற்றிக் கண் திறந்து எரித்து சாம்பலாக்கி விட்டார். அது நிகழ்ந்த இடம் தான் இந்த சோலை. இதனை காமன் ஆசிரமம் என்பார்கள். இந்த நாட்டுக்கு அங்க நாடு என்றும் பெயர்" என்று இராம காதையில் சரயு நதி பின்னிப் பிணைந்திருக்கிறது.

இராமர் இந்த உலக வாழ்வை முடித்து கொள்ளத் தீர்மானித்த போது, இந்த நதியில்தான் இறங்கினார் என நம்பப்படுகிறது. மேலும் லட்சுமணன் இந்த நதியில் மறைந்ததாகவும் கூறப்படுகிறது. அயோத்தி நகருக்கு குறுக்கே சரயு நதி ஓடியதால், எங்கு சென்றாலுமே இந்த நதியை கடந்து தான் செல்லவேண்டும். அதுதான் ராமாயணத்திலும் சரயு நதியைக் கடந்து ராமரும், சீதையும் சென்றார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

மதுரா, பிருந்தாவனம், கிருஷ்ண ஜென்மபூமி, அயோத்தி, ராம ஜென்மபூமி, வாரணாசி உள்ளிட்ட இடங்கள் இந்த அயோத்தியை சுற்றியே அமைந்துள்ளன.



e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில் **புத்தகத்தில்** (e-book) **வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த

**172** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**



## aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**

# ஞானவாபியில் செய்யும் திதி காரியங்கள்

# நரகத்தில் இருக்கும் மூதாதையரை சொர்க்கத்துக்கு மாற்றும்

e-magazine
aanmeegamalar.com




**லோலார்க் குண்டம்**

காசியில் பன்னிரண்டு ஆதித்தியர்களில் முக்கியமான லோலார்க் ஆதித்யா இருப்பதால் காசி காண்டம் லோலார்க் குண்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது.

அனைத்துத் தீர்த்தங்களிலும், லோலார்க்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.








காசியில் உள்ள லோலார்க் தீர்த்தத்தில் (தற்போது லோலார்க் குண்டம்) குளிப்பது, பூஜை போன்றவற்றைச் செய்வது பக்தர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக கருதப்படுகிறது.

பக்தர்களால் அனுசரிக்கப்படும் லோலார்க் குண்டின் முக்கியமான நாட்கள் மார்சிர்ஷ் மாதம், சுக்ல பக்ஷ ஷஷ்டி அல்லது சப்தமி (ஞாயிறு இணைந்தது), மாக மாதம், சுக்ல பக்ஷ சப்தமி (ரத சப்தமி).

இந்த குண்டத்தில் யாரும் வழக்கமாக குளிப்ப தில்லை என்பது எங்கள் ஆய்வில் தெரிய வந்துள் ளது. இருப்பினும், மேற்கண்டவாறு விசேஷ நாட் களில் கூட்டம் அதிகமாக இருக்கும்.

லோலார்க் ஆதித்யாவை வழிபட பக்தர்கள் இந்த குண்டத்திற்கு வருகிறார்கள். மூன்று இடங்களில் இருந்து கீழே செல்லும் படிகளுடன் குண்டிற்கான அணுகுமுறை நன்றாக கட்டப் பட்டுள்ளது. நான்காவது பக்கத்தில், குண்ட் ஒரு கிணற்றின் வடிவத்தை எடுக்கிறது.

காசிக்கு வரும் பக்தர்கள், சுமார் 1 கிமீ தொலைவில் உள்ள துர்கா தேவி கோவிலுடன் இந்த ஸ்தலத்திற்கும் வருகை தரலாம்.

## ஞான வாபி

காசி காண்டத்தின் படி ஈஷன் என்ற திக்பால் காசிக்கு வந்து, தனது திரிசூலத்தால் ஒரு வாபியைத் தோண்டினார். அது ஞான வாபி என்று அறியப்பட்டது. பின்னர் சிவபெருமானை வழிபடத் தொடங்கினார். இந்த

வாபி (கிணறு) நீர் பக்தர்களுக்கு அறிவை அளிக்க வல்லது. இந்த கிணறு விஸ்வநாதர் கோயில் வளாகத்தில் உள்ளது.

ஒரு இளவரசி கலாவதிக்கு காசியின்

e-magazine
aanmeegamalar.com

வரைப்பட்டம் வழங்கப்பட்டது. மேலும் அந்த வரைப்படத்தில் உள்ள ஞான வாபியைத் தன் விரலால் தொடும் போது, அவளுடைய முந்தைய பிறவியில் நிகழ்ந்த நிகழ்வுகளை, அவளால் அறிய முடிந்தது.

மற்ற இடங்களில் காசி காண்டம் பல்வேறு அத்தியாயங்களில் ஞான வாபி நீரின் நல்ல விளைவுகளை விரிவாக விவரித்துள்ளது.

ஞான வாபியில் நீராடி, தன் முன்னோர்களுக்கு திதி காரியங்கள் செய்யும் பக்தன் அவர்களை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்வான். அவர்கள் நரகத்தில் இருந்தாலும், சொர்க்கத்தை அடைவது உறுதி

எனினும், இன்றைய சூழ்நிலை யில், பலத்த போலீஸ் ரோந்துப் பணியில் ஈடுபடுவதால்.

சுதந்திரமாக இதுபோன்றசெயல் களில் ஈடுபட முடியாது. இருப்பினும், பக்தர்கள் ஞான வாபியை தரிசனம் செய்யலாம், அதிலிருந்து சிறிது தண்ணீரை தலையில் தெளிக் கலாம் அல்லது பிரசாதமாக உட் கொள்ளலாம்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்

தொலைபேசி எண்: 9839061178






# அயோத்தி இராமர் கோவில் இடிப்பும், கட்டுதலுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த கசப்பும்

பொதுவாக ஒரு நாட்டின் கலாச்சாரத்தை சீரழித்து, அந்த நாட்டை கொள்ளையடித்து, தங்களின் வம்சங்கள், தாங்கள் சார்ந்த மதத்தை பரப்பிவிடுவது போன்றவை 14ம் நூற்றாண்டிற்கு பின்பு உலகமெங்கும் பரவலாக நடைபெற்றது, அந்த காலக்கட்டத்திலிருந்து இன்றைய காலகட்டம் வரை உலகின் பல நாடுகள் தங்கள் பழமையான கலாச்சாரம், கலாச்சார தெய்வங்களை இழந்து, புதிதாக புகுத்தப்பட்ட கலாச்சாரத்தை ஏற்று புதிய மதத்திற்கு மாறிவரும் நிகழ்வு நடைபெற்று வருகிறது. இதில் விதிவிலக்காக இரண்டு விஷயங்களை இந்து மக்களும், இந்து மதமும் இன்றையகாலகட்டம் வரை கடைபிடித்துக் கொண்டுவருகிறது.

1. சைவம் சிவனை வழிபடும் சமயம்
2. வைணவம் விஷ்ணுவை வழிபடும் சமயம்
3. சாக்தம் உமையை வழிபடும் சமயம்
4. காணாபத்தியம் கணபதியை வழிபடும் சமயம்
5. கௌமாரம் முருகனை வழிபடும் சமயம்
6. சௌரம் சூரியனை வழிபடும் சமயம்

இவைகளை ஒன்றிணைத்து இந்துமதம் என்று ஒன்றாக இணைத்தாலும், இவை பிரிந்து இருந்த சமயம் முதற்கொண்டு ஒன்றிணைந்த காலகட்டம் வரை, மேற்கண்ட மதத்தைச் சேர்ந்த மன்னர்கள்

**1. யாரையும் கட்டாயப்படுத்தி மத மாற்றத்திற்கு வித்திடவில்லை,**
**2. தங்கள் மதத்தை திணிக்கவோ, மற்ற நாடுகளை கொள்ளையடித்து அங்கு தங்கள் மதத்தை புகுத்தவோ எண்ணியதில்லை.**

இதனால் உள் நாட்டில் போர் ஏற்பட்டாலும், அவரவர் வழிபாட்டு முறையை அவரவர்கள் கடைபிடித்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

ஆனால் வெளிநாட்டைச் சேர்ந்த மதத்தவர்களின் வருகையால் மேற்கண்ட மதங்கள் சிதைக்கப்பட்டன, அதிலும் குறிப்பாக சைவ, வைணவ ஆலயங்கள் பெரும்பாலும் சூறையாடப்பட்டன, அந்த வகையில் **காசி, அயோத்தியா என்ற மாபெரும் இரு ஆலயங்களில் வெளிநாட்டு மதத்தைச் சேர்ந்த கொள்ளைக்கார மன்னர்கள் நிகழ்த்திய தாக்குதல் உலகில் வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை.** அந்த வகையில் தற்போதுதான் அந்த மாபெரும் இரு ஆலயங்கள் சுய உருவத்தை பெறுகிறது என்றால் மிகையல்ல, அவ்வாறு தற்போது புது பொலிவுடன் காட்சிதரவிருக்கும் அயோத்தி கடந்து வந்த பாதையை பார்ப்போம்...

### பொ.ஆ.மு.100

ஸ்ரீராமன் பிறந்த அயோத்தியில், மிகப்பெரிய ராமர் கோயில் விக்கிரமாதித்த மன்னரால் கட்டப் பட்டது.


### பொ.யு.பி. 1528

மொகலாய ஆக்கிரப்பாளன் பாபரின் படைத் தளபதி மீர்பாஹி அயோத்தியில் பாபர் பெயரில் மசூதியைக் கட்டினான்; முன்னதாக அங்கிருந்த ராமர் கோயிலை இடித்து தரைமட்டமாக்கி, அதன்மீதே மசூதியை எழுப்பினான்.

### 1600 – 1853:

கோயிலை மீட்க பலமுறை போர்கள், போராட் டங்கள், பல்லாயிரக்கணக்கானோர் ராமர் கோ யிலை மீட்கும் போர்களில் பலியாகினர்.

e-magazine
aanmeegamalar.com



## 1611

பிரிட்டிஷ் வியாபாரி வில்லியம் ஃபின்ச் எழுதிய பயணக்குறிப்பில், ஆக்கிரமிப்பில் இருந்தபோதும், அயோத்தியில் இருந்த மசூதியில் ஹிந்துக்கள் ராமனை வழிபட்டனர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## 1717

ராஜபுதன அரசர் இரண்டாம் ஜெய்சிங், முகலாய அரசுடன் பேசி, ராமர் கோயில் இருந்த இடத்தை விலைக்கு வாங்கினார். அதையடுத்து, அங்கு வழிபாடு சில காலம் தடையின்றி நடந்தது.

## 1853

பாபர் ஆட்சிக் காலத்தில் ராமர் கோயில் ஒன்று இடிக்கப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து பெரிய கலவரம் வெடித்ததாகவும் பதிவுகள் உள்ளன.

அவத் ராஜ்ஜியத்தின் மன்னரான நவாப் வஜித் ஷா இருந்தபோது, நிர்மோஹி அகாரா மடத்தின் துறவிகள் சர்ச்சைக்குரிய கட்டிடம் கைப்பற்ற முயற்சி செய்தனர் இதனால் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டது. பிரிட்டிஷ் அரசு வளாகத்தின் உள்ளே முஸ்லிம்கள் தொழுகை நடத்தவும், வெளிப்புறத்தில் ராம்சாத்புராவில் ஹிந்துக்கள் வழிபாடு நடத்தவும் அனுமதிக்கப்பட்டது.

## 1883

கோயிலை மீட்க முயற்சி; பிரிட்டிஷ் அரசு தடுத்தது; சுற்றிலும் வேலி அமைத்த மாவட்ட நிர்வாகம் வளாகத்தைப் பூட்டியது.

## 1885 ஜனவரி 27

அந்த இடத்திலேயே ராமர் கோயில் கட்ட அனுமதி கோரி, மஹந்த் ரகுபீர்தாஸ் பைசாபாத் நீதிமன்றத்தில் வழக்கு; நீதிபதிகள் நிராகரிப்பு.

## 1894: டிசம்பர் 22

சர்ச்சைக்குரிய இடத்துக்கு வெளியே ராமர், சீதா சிலைகள் வைக்கப்பட்டன. இதனால்பெரும் பிரச்சினை உருவானதால் அந்த இடம் பூட்டப் பட்டது. இதற்கு இந்து, முஸ்லிம் தரப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றம் சென்றனர்.

## 1937

அயோத்தி ராமர் கோயிலை மீட்க, கோரக்பூர் மடத்தின் தலைவர் மஹந்த் திக்விஜய்நாத் (மஹந்த் அவைத்யநாத்தின் குரு) தலைமையில் முயற்சிகள் துவங்கின.

## 1946

ராமர் கோயிலில் வழிபாட்டு உரிமை கோரி, ஹிந்து மகா சபையின் அங்கமான அகில பாரதீய ராமாயண மகாசபா போராட்டத்தைத் துவக்கியது.

## 1949

அயோத்தியில் ஸ்ரீ ராமசரிதமானஸ் பாராயணம் செய்யும் தொடர் போராட்டத்தை அகில பாரதீய ராமாயண மகாசபா நடத்தியது.

## 1949 டிசம்பர் 22, 23

பாபர் மசூதி வளாகத்தினுள் திடீரென, ராமர், சீதை விக்கிரகங்கள் நிறுவப்பட்டன. சிலைகளை அகற்றினால் கலவரம் வெடிக்கும் என்று கூறி, மத்திய அரசின் உத்தரவை ஏற்க பைசாபாத் மாவட்ட ஆட்சியர் கே . கே. நாயர் மறுப்பு; வளாகம் பூட்டப்பட்டது.

## 1950 ஜனவரி 16

ராமர் சிலையை வழிபட அனுமதி கோரி பைசா பாத் நீதிமன்றத்தில் கோபால் சிம்லா விஷாரத்

ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
ஆன்மிகமலர் .காம்
e-magazine
aanmeegamalar.com

என்பவர் மனுச் செய்தார். அந்த சிலையை வழிபட அனுமதி கோரி பரமஹம்ச ராமச்சந்திர தாஸூம் மனுச் செய்தார். பூஜை செய்ய அனுமதி கிடைத்தாலும் சர்ச்சைக்குரிய மையப்பகுதி பூட்டியே இருந்தது.

## 1959

ராமர் சிலை உள்ள அந்த இடம் முழுவதும் தங்களுக்கே சொந்தம் என்று நில உரிமை கோரி நிர்மோஹி அகாராவழக்கு.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## 1961

உத்தரப்பிரதேச சன்னி வக்பு வாரியமும் சர்ச்சைக்குரிய இடத்துக்கு உரிமை கோரியும் பாபர் மசூதிக்குள் உள்ள ராமர், சீதை சிலைகளை அகற்றக் கோரியும் வழக்கு தொடுத்தது.

## 1978

தொல்லியல் ஆய்வுத் துறை சார்பில் அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டிடம் அருகே அகழாய்வு நடைபெற்றது. அந்த ஆய்வில், அந்த இடத்தில் பழமையான கோயில் கட்டுமானம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்தன.

## 1984

ராமர் கோயிலை மீட்க, விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் தலைவர் அசோக் சிங்கல் ராமஜன்ம பூமி மீட்பு இயக்கத்தைத் துவக்கினார்.

## 1984, அக்டோபர் 7

பிகாரின் சீதாமார்ஹியில் இருந்து அயோத்தி நோக்கி ராமஜன்ம பூமி மீட்பு யாத்திரையை விஸ்வ ஹிந்து பரிஷத் துவக்கியது. பிரதமர் இந்திராகாந்தி (அக்டோபர் 31) படுகொலையால், இந்தப் போராட்டம் இடையிலேயே நிறுத்தப் பட்டது.

## 1985 அக்டோபர் 31

உடுப்பியில் கூடிய துறவியர் மாநாடு, அயோத்தியில் ராமரைத் தரிசிக்க மசூதி வளாகத்தைத் திறக்க வேண்டும் என்று கோரியது; கோரக்பூர் மடத்தின் தலைவர் மஹந்த் அவைத்யநாத் (உ.பி. முதல்வர் ஆதித்யநாத்தின் குரு) தலைமையில் போராட்டக் குழு அமைக்கப்பட்டது.

## 1986

சையத் சஹாபுதீன் தலைமையில் பாபர் மசூதி நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது.

## 1986 ஜனவரி 25

ராமர் கோயிலில் வழிபட கதவுகளைத் திறந்து விடுமாறு பைசாபாத் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் உமேஷ் சந்திர பாண்டே வழக்கு.

## 1986 பிப்ரவரி 1

அயோத்தியில் ராமரை வழிபட சர்ச்சைக்குரிய இடத்தில் அனுமதி அளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## 1989


சர்ச்சைக்குரிய இடத்தில் தற்போதுள்ள நிலையே தொடரலாம் என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அயோத்தியில் ராமர் கோயில் அமைப்போம் என்று பாஜக தனது மக்களவைத் தேர்தல் அறிக்கையில் அறிவித்தது.

## 1989

வி.எச்.பி சார்பில் ராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்ட, ராமர் பெயர் பொறிக்கப்பட்ட செங்கற்களை அனுப்பும் வகையில், நாடு முழுவதும் ராம்சிலா யாத்திரைகள் நடத்தப்பட்டன.



தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு
தயாராகிறது
ஆறுபடையப்பன்
சிறப்பிதழ்
விளம்பரம் மற்றும் பிரதிக்கு தொடர்பு கொள்ளவும்
9994162182 / 9994323622
9444228203


## 1989 நவம்பர் 9

அயோத்தியில் சர்ச்சைக்குரிய வளாகத்துக்கு வெளியே 'ராம்சிலான்யாஸ்' எனப்படும் பூமிபூஜை நடைபெற்றது. பிகாரைச் சேர்ந்த பட்டியலின இளைஞர் காமேஸ்வர் சௌபால் ராமர் கோயிலுக்கான அடிக்கல்லை நாட்டினார்.

ஆன்மிகமலர் .காம்

## 1990 செப்டம்பர்

வி.எச்.பி சார்பில் நாடு முழுவதும் ராமஜோதி யாத்திரைகள் நடத்தப்பட்டன; கரசேவகர்கள் அயோத்தி நோக்கிச் செல்லுதல்.

## 1990 செப்டம்பர் 25

ராமர் கோயிலுக்கு ஆதரவு தெரிவித்து, குஜராத்தின் சோமநாதபுரத்தில் இருந்து அயோத்தி நோக்கி ராமரத யாத்திரையை பாஜக தலைவர் லால் கிருஷ்ண அத்வானி துவக்கினார்.

## 1990 அக்டோபர். 23

பிகாரின் சமஸ்திபூரில் அத்வானி கைது செய்யப்பட்டார். நாடு முழுவதும் கரசேவகர்கள் கைது செய்யப்பட்டனர்.

## 1990 அக்டோபர் 30

அயோத்தியில் கூடிய கரசேவகர்கள் மீது முலாயம் சிங் அரசு துப்பாக்கிச் சூடு; கரசேவகர்கள் பலநூறு பேர் பலி. சரயூ நதியெங்கும் ராம பக்தர்களின் சடலங்கள் மிதந்தன.

## 1991 ஜூன் 24

உத்தரப்பிரதேசத்தில் கல்யாண் சிங் தலைமையில் பாஜக ஆட்சி அமைந்தது.

## 1992 நவம்பர்

பரிஷத் சார்பில் ராமர் பாதுகை யாத்திரைகள் நாடு முழுவதும் நடந்தன; கரசேவகர்கள் மீண்டும் அயோத்தி நோக்கிச் செல்லுதல்.

## 1992 டிசம்பர். 6

அயோத்தியில் இருந்த சர்ச்சைக்குரிய கட்டிடம் ராமபக்தர்களால் தரைமட்டமாக்கப்பட்டது; அதே இடத்தில் ராமருக்கு தற்காலிகக் கோயில் அமைக்கப்பட்டது; நாட்டின் பல இடங்களில் மதக் கலவரம்; சுமார் 1,500 பேர் பலி. அயோத்தி நிகழ்வைக் காரணம் காட்டி, உ.பி. ம.பி, ராஜஸ்தான், இமாச்சல் ஆகிய 4 மாநிலங்களில் பாஜக ஆட்சிகள் கலைப்பு.

## 1992 டிசம்பர் 10

ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங் தளம் ஆகிய ஹிந்து அமைப்புகள், அப்போதைய நரசிம்ம ராவ் தலைமையிலான மத்திய அரசால் தடை செய்யப்பட்டன.

## 1992 டிசம்பர் 16

சர்ச்சைக்குரிய கட்டிடம் இடிப்பு குறித்து விசாரிக்க நீதிபதி எம்.எஸ்.லிபரான் ஆணையம் அமைப்பு.

## 1993 ஜனவரி:

சர்ச்சைக்குரிய வளாகத்தின் 2.77 ஏக்கர் நிலமும், அதன் அருகில் உ.பி. மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருந்த 67.7 ஏக்கர் நிலமும் மத்திய அரசால் கையகப்படுத்தப்பட்டன.

## 1993 ஜனவரி 25

ராமர் கோயில் கட்டுமானப் பணிக்காக, ராமஜன்மபூமி நியாஸ் அமைப்பு மஹந்த் ராமசந்திர தாஸ் பரமஹம்ஸர் தலைமையில் உருவாக்கப்பட்டது; அயோத்தியில் கரசேவகபுரம் என்ற இடத்தில் கோயில் தூண்களின் சிற்ப வேலைப்பாடுகள் துவக்கம்.

## 1993 ஜூன் 4

ஹிந்து அமைப்புகள் மீதான தடை, நீதிபதி பாஹ்ரி தீர்ப்பாயத்தால் நீக்கப்பட்டது.

## 1993 அக்டோபர் 5

மத்திய புலனாய்வு அமைப்பால் சர்ச்சைக்குரிய கட்டிடம் இடிப்பு வழக்கு விசாரணை துவக்கம். இதில் பாஜக தலைவர்கள் அத்வானி, ஜோஷி, கல்யாண் சிங், உமாபாரதி, பரிஷத் தலைவர்கள் அசோக் சிங்கல், வினய்கத்தியார் உள்ளிட்டோர் மீது குற்றச்சாட்டு.

ஆன்மிகமலர் .காம்

## 1998 மார்ச் 19

வாஜ்பாய் தலைமையிலான பாஜக கூட்டணி அரசு அமைந்தது. ராமர் கோயிலுக்கான முயற்சிகள் மீண்டும் துவக்கம்.

## 2002 – 2003

காஞ்சி சங்கராச்சாரியார் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இரு தரப்பிலும் சமரசப் பேச்சு நடத்தினார்.

## 2002 பிப்ரவரி

அயோத்தியில் ராமசேவகர்களின் பூர்ணாஹுதி மகாயக்ஞம். இதில் கலந்துகொண்டு குஜராத் திரும்பிய ராமசேவகர்கள் சென்ற ரயில் கோத்ரா ரயில் நிலையத்தில் எரிக்கப்பட்டதில் 59 ராம பக்தர்கள் பலி.

## 2002 மார்ச் 15

அயோத்தியில் சிலா தானம் (கல் தூண்களை ஒப்படைத்தல்) நிகழ்வு, மஹந்த் ராமசந்திர பரம

ஆன்மிகமலர் .காம்



ஹம்சர் முன்னிலையில் நடைபெற்றது.

## 2002 ஏப்ரல்

அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் லக்னௌ சிறப்பு அமர்வில், அயோத்தி இடம் யாருக்கு சொந்தம் என்ற வழக்கு விசாரணை துவக்கம்.

## 2003 ஜனவரி

அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டிடம் இருந்த இடத்தில் முன்னர் கோயில் இருந்ததா என்பது குறித்து இந்திய தொல்லியல் ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வைத் துவக்கியது. இந்த ஆய்வில் மசூதி இருந்த இடத்தின் கீழே பல அடி ஆழத்தில் கோயில் கட்டுமானங்கள் இருப்பதை தொல்லியல் குழு கண்டறிந்தது.

## 2003 ஜூலை 31

மஹந்த் ராமசந்திர பரமஹம்ஸர் காலமானார். மஹந்த் நிருத்ய கோபால்தாஸ், ராம ஜன்மபூமி நியாஸின் தலைவரானார்.

## 2003 ஆகஸ்ட்

தொல்லியல் ஆய்வு நிறுவனம் அளித்தஅறிக்கை, அங்கு அடித்தளத்தில் மிகப் பெரியகோயில் இருப்பதை உறுதிப்படுத்தியது. தொல்லியல்அறிஞர் கே.கே.முகமது தலைமையிலான குழுவினர் அளித்த அறிக்கை நீதிமன்றவழக்கில் முக்கியமான ஆதாரமாக பின்னாளில் பயன்பட்டது.

## 2009 ஜூன் 30

பதினேழு ஆண்டுகள் கழித்து, லிபரான் ஆணையம் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் அறிக்கை சமர்ப்பிப்பு. இதில் எல். கே.அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, கல்யாண் சிங், உமாபாரதி, அசோக் சிங்கல் உள்ளிட்டோர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

## 2010 செப்டம்பர். 30

அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் எஸ்.வி.கான், சுதிர் அகர்வால், டி.வி.சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு, அயோத்தி நில உரிமை வழக்கில் தீர்ப்பு வழங்கியது. ‘கடவுள் பால ராமன் (ராம் லல்லா), நிர்மோஹி அகாரா, சன்னி வக்பு வாரியம் ஆகிய மூன்று தரப்புக்கும் 2.77 ஏக்கர் நிலத்தை பங்கிட்டு அளிக்க வேண்டும்; தற்காலிக ராமர் கோயில் அமைந்துள்ள முந்தைய கட்டிடத்தின் மைய இடம் ராம் லல்லாவுக் குச் சொந்தமானது’ என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

## 2011 மே 9

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மூன்று தரப்பினரும் மனுச் செய்ததால், அத்தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது.

## 2014 மே 26

நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு அமைந்தது.

## 2017 மார்ச் 19

உத்தரப்பிரதேச மாநில முதல்வராக யோகி ஆதித்யநாத் (பாஜக) பொறுப்பேற்பு

## 2017 ஆகஸ்ட்

ராமர் கோயில் நில உரிமை வழக்கு உச்ச

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!.காம்

நீதிமன்றத்தில் நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான மூவர் அமர்வு விசாரணை துவக்கம்.

## 2019 ஜனவரி

உச்ச நீதிமன்றத்தில் அயோத்தி வழக்கு, தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வால் விசாரணை துவக்கம்.

## 2019 மார்ச் 4– ஏப்ரல் 14

பரிஷத் அமைப்பால் ராமேஸ்வரத்திலிருந்து அயோத்தி நோக்கி ராமராஜ்ய யாத்திரை நடத்தப்பட்டது.

## 2019 மார்ச் 8

முன்னாள் நீதிபதி எஃப்.எம். கலிஃபுல்லா, வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீஸ்ரீரவிசங்கர், மூத்த வழக்குரைஞர் ஸ்ரீராம் பஞ்சு ஆகியோர் அடங்கிய சமரசக் குழுவை அமைத்தது உச்ச நீதிமன்றம்.

## 2019 ஆகஸ்ட். 2

சமரச முயற்சிகள் வெற்றி பெறவில்லை என, மூவர் குழு அறிக்கை தாக்கல்.

## 2019 ஆகஸ்ட். 6

அயோத்தி நில உரிமை வழக்கு விசாரணை, தினசரி அடிப்படையில் துவக்கம். ராம ஜன்மபூமி அறக்கட்டளை சார்பில் மூத்த வழக்குரைஞர் கே.பராசரன் வழக்காடினார்.

## 2019 அக்டோபர். 15

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதிபதிகள் எஸ்.ஏ.போப்டே, டி.ஒய். சந்திரசூட், அசோக் பூஷண், எஸ். அப்துல் நசீர் ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வால் 40 நாட்கள் தொடர்ந்து விசாரிக்கப்பட்ட வழக்கு நிறைவு; தீர்ப்பு ஒத்திவைப்பு.

## 2019 நவம்பர். 9

உச்ச நீதிமன்றம் அயோத்தி நில உரிமை வழக்கில் இறுதித் தீர்ப்பளித்தது. ‘சர்ச்சைக்கு உரியதாக இருந்த குறிப்பிட்ட 2..77 ஏக்கர் நிலமும் ராம் லல்லாவுக்கே சொந்தம்; அந்த இடத்தில் ராமர்கோயில் அமைக்க அறக்கட்டளையை மத்திய அரசு அமைக்க வேண்டும்; முஸ்லிம்கள் மசூதிகட்ட தனியே 5 ஏக்கர் நிலம் மாநில அரசால் அளிக்கப்பட வேண்டும்’ என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## 2020 பிப்ரவரி. 5

அயோத்தியில் ராமர் கோயில் அமைக்க, மஹந்த் நிருத்ய கோபால்தாஸ் தலைமையில் 15 உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ரீ ராம ஜன்மபூமி தீர்த்தக்ஷேத்ர அறக்கட்டளையை அமைப்பதாக, பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்ற மக்களவையில் அறிவித்தார். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 2.77 ஏக்கர் நிலத்தையும், ஏற்கெனவே கையகப்படுத்தியுள்ள 67.7 ஏக்கர் நிலத்தையும் கோயில் கட்ட அளிப்பதாகவும் அவர் அறிவித்தார்.

## 2020 ஜூலை 28

பாபர் மசூதி இடிப்பு வழக்கை விசாரிக்கும் டில்லி, சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் வாக்கு மூலங்கள் பதிவு நிறைவு.

## 2020 ஆகஸ்ட். 5

அயோத்தியில் பிரம்மாண்ட மான ராமர் கோயில் அமைப்பதற்கான பூமிபூஜை நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று, அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், ஸ்ரீ ராம ஜன்மபூமி தீர்த்தக்ஷேத்ர அறக்கட்டளை தலைவர் மஹந்த் நிருத்ய கோபால்தாஸ் ஆகியோர் பங்கேற்பு.

## 2020 செப்டம்பர் 30

சர்ச்சைக்குரிய கட்டிடம் இடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பாஜக மூத்த தலைவர்கள் லால் கிருஷ்ண அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, கல்யாண் சிங், வினய் கட்டியார், உமா பாரதி, சாக்ஷி மஹராஜ் உள்ளிட்ட 32 பேரை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் விடுவித்தது.

## 2021 ஜனவரி. 15

ராமர் திருக்கோயிலை நாட்டு மக்கள் அனைவரது பங்களிப்புடன் மீண்டும் அமைப்பதற்காக ஸ்ரீ ராம ஜன்மபூமி ராமர் கோயில் நிதி சமர்ப்பண இயக்கம் துவங்கியது. நாடு முழுவதும் 400 இடங்களில் பரிஷத் நிர்வாகிகள் இப்பணியைத் துவக்கினர். ரூ. 2,000 கோடி செலவில் திருக்கோயிலை கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.



e-magazine
aanmeegamalar.com

# மோகத்தை கொன்றுவிடு

e-magazine
aanmeegamalar.com

இறைவனை அடைவதற்கு ஒரு மனிதன் கடைபிடிக்க வேண்டிய மனம் மற்றும் உடல் சார்ந்த வழிகள் எதுவென்று கண்டறிந்து சொல்லிய பதஞ்சலி மகரிஷி தனது மார்க்கத்திற்கு அஷ்டாங்க யோகம் என்று பெயரிட்டார். கௌதம புத்தரும் ஒரு மனிதன் நிறை ஞானியாக ஆவதற்கான வழிக்கு அஷ்டாங்க மார்க்கம் என்று பெயரிட்டார். அதாவது மனிதனின் துன்பங்களுக்கு காரணம் ஆசையே என்பதை கண்டறிந்த புத்தர் அந்த ஆசையைவிலக்கி துன்பத்திலிருந்து பரிபூரணமாக விடுதலை பெறவும் வழிவகை செய்திருக்கிறார்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

இன்னது தான் நோயென்று கண்டறிந்த வைத்தியன் அந்த நோயை நீக்குவதற்கு மருந்தை கண்டுபிடித்து கொடுக்கவில்லை என்றால் அவனை எப்படி மருத்துவன் என்று ஒத்துகொள்ள முடியும் உடல் பிணியை போக்குகின்ற வைத்தியனுக்கே இத்தனை கடமை இருக்கும் போது வாழ்க்கை என்ற பெரும்பிணியை போக்குகின்ற மாபெரும் ஞான வைத்தியன் வழிமுறையை சொல்லாமல் போகமுடியுமா?

எனவே புத்தர் துன்பத்திலிருந்துமனிதன் முற்றிலுமாக விடுபட மெய்யான அறிவு என்ற நற்காட்சி நல்லெண்ணம் நல்லுரை நற்செயல் நல்லூதியம் அதாவது சிறந்த வாழ்வுக்கான வழிமுறை நல்முயற்சி நல்லூற்றம் நற்சமாதி என்று எட்டுவகையான அஷ்டாங்க மார்க்கத்தை நமக்கு தந்திருக்கிறார். இதையே வடமொழியில் சம்யக் சிருஷ்டி, சம்யக் சங்கல்பம், சம்யக் வாணி, சம்யக் கர்மானித,



ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

சம்யக் ஆஜீவிகா, சம்யக் வ்யாபாரம், சம்யக் ஸ்மிருதி, சம்யக் சமாதி என்று சொன்னார்கள் இந்த அஷ்டாங்க மார்க்கத்தை ஆரிய மார்க்கம் அதாவது உயர்ந்த வழி என்று அழைப்பதும் பௌத்த மரபாகும்.

இந்த எட்டில் முதல் இரண்டு மார்க்கங்கள் பிரக்ஞா என்னும் மெய்யறிவை மனிதன் தேடி அடைவதாகும். இந்த அறிவின் படி வாழ்வின் நெறிமுறைகளை கடைபிடித்தலே பௌத்தம் சிறப்பித்து கூறும் சீலம் அல்லது ஒழுக்கமாகும். அடுத்ததாக சொல்லப்படும் மூன்று மார்க்கங்கள் ஒழுக்கம் என்ற சீலம் சார்ந்ததாகும்.

கடைசியாக கூறப்படும் மூன்று மார்க்கங்களும் அறிவாலும் ஒழுக்கத்தாலும் கனிந்து ஒருமனிதன் பெறக்கூடிய சமாதி என்ற உயர்நிலை அமைதியை அல்லது சாந்தியை குறிப்பதாகும். இந்த எட்டு அங்கங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு ஒருவனது வாழ்க்கையை நெறிபடுத்தபட்டதாக ஆக்கி விடும் என்று புத்தமதம் நம்பிக்கை தருகிறது.

இது மட்டுமல்ல கொல்லாமை என்ற அஹிம்சா தர்மமும் திருடாமை பொய் கூறாமை உடல் ஒழுக்கம் என்ற பிரம்மசரியம் மது மற்றும் போதை பொருள்களை தவிர்த்தல் என்னும் பஞ்ச சீலத்தையும் அதாவது ஐந்து வகையான ஒழுக்கத்தையும் ஒருமனிதன் கடைபிடித்தே ஆக வேண்டிய கட்டாயமாகும்.

புத்தரின் வழியில் நடப்பவர்கள் மட்டுமல்ல புத்தரை அறியாதவர்கள் கூட இந்த பஞ்சசீல கொள்கையை புறம்தள்ளிவிட முடியாது. புத்தசமையத்தார் போதையை தவிர்க்க கூறுவதை போல ஜைன மதத்தாரும் மது மற்றும் மாமிச பொருள்களை தவிர்க்க வேண்டும் என்பதை பரிமித பரிக்ரகம் என்னும் அதிக பொருள்களின் மீது ஆசை வைக்காதே என்று சொல்லுகின்ற இடத்தில் வலியுறுத்தி இருப்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

இந்த அறநெறி கோட்பாட்டில் திருமணம் முடிந்து பிள்ளை குட்டிகளோடு வாழுகின்ற சம்சாரிகளும் பிரம்மசரியமாக வாழுகின்ற துறவிகளும் தனித்தனியாக பல வித நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டுமென்று பௌத்தம் வகுத்து தந்திருக்கிறது.


யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

புத்தர் தமது திருவாக்கால்பிச்சுகள் அதாவது துறவிகள் எத்தகைய ஒழுக்க நெறிகளை கடைபிடிக்க வேண்டும் என்று கூறியிருப்பதை வினையபிடகம் என்ற புத்த புனித மறை தெளிவாக சொல்கிறது. அதன் அடிப்படையில் நிர்வாண நிலை என்ற மேல்நிலைக்கு செல்கின்ற மனிதர்கள் நான்கு வகைகளாக இருக்கிறார்கள். அதாவது அவர்கள் ஸ்ரோதாபன்னர், சக்ருதாகாமி, அனாகாமி, அர்ஹத் என்று அந்த நான்கு வகை துறவிகள் வகைபடுத்த படுகிறார்கள்.

அதாவது ஸ்ரோதாபன்னர் துறவியாக மாறி விட்டாலும் கூட அவர் நிர்வாண நிலையை அடைய ஒழுக்க நெறியை இன்னும் அதிகபடியாக பின்பற்ற வேண்டும். அதை போல சக்ருதாகாமி என்பவர் நிர்வாண நிலையை அடைவதற்கு இன்னும் ஒரு பிறவி எடுக்க வேண்டியவர் என்பதாகும்.

ஒழுக்கத்தில் மிக சிறந்தவராக அனாகாமி கருதபடுகிறார். இந்த ஜென்மாவிலே பரிநிர்வாண நிலையை எட்டி பிடிக்கும் தகுதி உடையவர் என்பவர் அர்ஹத் என்ற வகையை சேர்ந்த தவசீலர் ஆவர். இவரே போதி சத்துவர் என்ற மாபெரும் நிலையை அடைய கூடியவராகவும் இருக்கிறார்.

ஒரு மனிதன் போதி ஞானத்தை பெற பஞ்ச நவரனங்கள் என்ற சில தீமைகள் தடையாக இருக்கின்றன. அந்த தீமைகள் எவை என்றால் காமச்சந்தம் என்ற ஆசை, வியாபாதம் என்ற பகைமை, குரோதம், துவேசம் தீனமித்த என்ற சோர்வு மற்றும் சோம்பல் உத்தச்ச குக்குச்ச என்னும் சஞ்சலம் அகங்காரம் கவலை விகிட்சா என்ற சந்தேகம் மயக்கம் ஆகியவைகள் ஆகும்.

இந்த ஐந்தும் நீங்க பெற்றால் போதி ஞானம் மனிதனை தேடி வரும். இந்த ஐந்து அதாவது பஞ்ச நவரனங்கள் நம்மிடமிருந்து விலகுவதற்கு மைத்திரி என்ற நேயம் கருணா என்ற இரக்கம் முகிகா என்ற மகிழ்வு உபேட்ச்சா என்ற சமநோக்கு ஆகியவைகள் கண்டிப்பாக வேண்டுமென்று பௌத்தம் வலியுறுத்துகிறது.

அதாவது புத்தரின் மிக முக்கிய

e-magazine
aanmeegamalar.com

கோட்பாடுகளாகிய அன்பு அருள் இரக்கம் சமநோக்கு ஆகிய நான்கும் பிரம்ம விஹாரம் என்ற பெயரால் பார்க்க படுகிறது. உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த ஒருவன் பழக வேண்டும். ஒருவருடைய பசி ஒருவருடைய நோய் ஒருவருடைய வறுமை உண்மையான ஆன்மநேயனின் மனதை உருக்க வேண்டும். பசி, பிணி, வறுமையை போக்க அவன் பாடுபட வேண்டும். தனக்கு இருப்பது போதும் இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்ற ஆசை அறவே ஒழிக்கப்பட வேண்டும் பொறாமை, கோபம் இல்லாதவனாக ஒருவன் வாழ பழக வேண்டும். புலன்கள் இச்சைபடுகின்ற வண்ணம் செயல்படாதவனாக பணக்காரன், ஏழை என்ற ஏற்ற தாழ்வை கருதாதவனாக இருக்க வேண்டும் என்பதே புத்தரின் மிக முக்கிய கட்டளைகள் ஆகும்.

இது தவிர புத்தர் நம்மை போன்ற சாதாரண மனிதர்களுக்கு தசபாரமிதா என்ற பத்து கட்டளைகளை தந்திருக்கிறார். அவைகள் தானம், ஒழுக்கம், தன்னலம் கருதாமை, மெய்யறிவு, முயற்சி, பொறுமை, நேர்மை, கருணை, பணிவு, சமநோக்கு என்பவைகளாகும். இவைகளை பௌத்தனாக இருக்கும் ஒவ்வொருவனும் கடைபிடிக்க வேண்டும். இதை கடைபிடிக்காதவன் எவனாக இருந்தாலும் அவன் பௌத்தன் அல்ல. இத்தகைய உயர்ந்த நன்னெறிகளை கடைபிடிக்க ஒரு மனிதனுக்கு உறுதியான மனம் வேண்டும். அலைபாயும் மனமுடைய எவனும் உயர்ந்த கோட்பாடுகளை வாழ்க்கை பாதையாக கொள்ள இயலாது. எனவே புத்தர் உறுதியான மனநிலையை ஒருவன் அடைய மும்மணிகள் என்ற தாரக மந்திரத்தை தந்திருக்கிறார். அது

புத்தம் சரணம் கச்சாமி சங்கம் சரணம்
கச்சாமி தர்மம் சரணம் கச்சாமி

என்பதாகும். இந்த தாரக மந்திரம் எங்கே ஒலிக்கிறதோ எவன் மனதில் இடையறாது ரீங்காரம் இடுகிறதோ அங்கே ஆசை இருக்காது. மோகம் இருக்காது. கோபம் இருக்காது. லோபம் இருக்காது. அமைதியும், சாந்தமும், சகோதரத்துவமும் எப்போதும் விலகாது நிலை யாக இருக்கும். சாந்தம் தவழுகின்ற மனதே பேரானந்தம் நிலவுகின்ற இடமாகும். பேரானந்தம் எங்கு உள்ளதோ அங்கு முத்தி என்ற பரி நிர்வாணம் தானாக தேடி வரும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
சார்பில் வெளியிடும்

23.01.2024
அன்று வெளிவரும்...

# தைப்பூசம் திருவிழா
# ஆறுபடையப்பன் சிறப்பிதழ்

48 பக்கம்



- ஆறுபடைமுருகன் ஸ்தலங்கள் சிறப்பு
- 12 ராசிக்குரிய முருகன் கோவில்கள்
- மூன்றாம் படைவீடு ரகசியம்
- முழங்கால் வலி தீர்க்கும் முருகன்
- செம்பு முருகனின் சிறப்புகள்



இந்த ஆண்டின் கிரிவல நாட்கள், பிரதோஷ நாட்கள், போன்றவற்றின் தொகுப்பு கொண்ட பொக்கிஷம் புத்தகம் தேவைப்படுவர்கள், விளம்பர முகவர்கள் தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

Ph:9994323622 / 9994162182

9444228203



e-magazine
aanmeegamalar.com

# ஆன்மீக வழியில் அமைதி

75

பாவ புண்ணிய கர்மாக்களின் பலன்களைப் பொறுத்து ஒவ்வொரு ஜீவனுக்கும் அதற்குத் தகுந்த சரீரம், பெற்றோர்கள், மகன்கள், மகள்கள் மற்றும் உறவுகள் போன்றவைகள் கிடைக்கும். அதாவது ஒரு மனிதனிடம் புண்ணிய கர்மப் பலன்கள் அதிகம் இருந்தால் அவனுக்கு நல்ல குணமுடைய பெற்றோர்கள், மகன்கள், மகள்கள் உறவுகள் போன்ற சுகமான வாழ்வு கிடைக்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதேபோன்று மனிதனிடம் பாவ கர்மா பலன்கள் அதிகம் இருந்தால் சரீரக்குறைபாடு, குடிகாரத் தந்தை, பாசமில்லாத தாய், குணங்களற்ற மகன்கள், மகள்கள், உறவுகள் மற்றும் சூழ்நிலைகள் போன்றவை அமையும்.

பொதுவாக மனித ஜன்மம் எடுத்த ஜீவன்கள் உலக செயல்பாடுகளில் ஈடுபட்டு மீண்டும் பாவம் புண்ணியம் போன்ற கர்மாக்களை சேர்த்துக் கொள்கின்றன. ஒரு ஜீவன் தன்னுடைய செயல்பாடுகள் மூலம் அளவற்ற புண்ணிய பாவ கர்மாக்களை சேர்த்திருந்தால் அது சஞ்சித கர்மா என்று அழைக்கப்படுகிறது. சஞ்சித கர்மா என்பது ஒவ்வொரு ஜீவனிடத்தில் உள்ள புண்ணிய பாவ கர்மாக்கள் என்று பொருள். அதாவது அந்த ஜீவன்கள் ஏற்கனவே செய்த பாவ புண்ணியக் குவியல்கள் சஞ்சித கர்மா ஆகும். அதாவது அந்த ஜீவன்களிடம் முன் ஜென்மத்தில் ஏற்கனவே இருக்கும் புண்ணிய பாவ கர்மாக்கள்தான் சஞ்சித கர்மா என்று கூறப்படுகிறது.

சஞ்சித கர்மாவில் உள்ள பாவ புண்ணிய கர்மாக்களில் ஒரு குறிப்பிட்ட அளவு ஜீவனின் பாவ புண்ணிய கர்மாக்களை வெளிபடுத்துவதன் காரணமாக அந்த ஜீவனுக்கு மனித ஜென்மம் ஏற்படுகிறது. அப்படி ஒரு குறிப்பிட்ட அளவு புண்ணிய பாவ கர்மாக்களை வெளிபடுத்தும் கர்மாவிற்கு பிரார்த்த கர்மா என்று கூறப்படுகிறது. பிரார்த்தம் என்றால் வெளிப்பட்ட பாவங்கள் புண்ணிய கர்மாக்கள் என்று பொருள்படும். பிரபஞ்சத்தில் நாம் ஆணாகவோ, பெண்ணாகவோ பிறந்தது நமது விருப்பப்பட்டு தேர்ந்தெடுத்தது அல்ல. அதேபோல் நாம் பிறந்த இடம், நமது பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள் போன்றவற்றை நாம் விருப்பப்பட்டு



தேர்ந்தெடுத்தது அல்ல. நாம் செய்த புண்ணிய பாவ கர்மாக்களுக்கு ஏற்றவாறு நமது வாழ்வு அமைவதுதான் பிரார்த்தம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனித ஜன்மங்கள் மூலம் நாம் பாவ புண்ணியங்களை ஒரு வழியில் சுகம், துக்கம் போன்றவற்றால் தீர்த்துக்கொண்டு இருக்கிறோம். அதேபோன்று மற்றோரு வழியில் அதாவது நம் மனம், வாக்கு, செயல்பாடுகள் போன்றவற்றின் மூலம் நாம் பாவ புண்ணியங்களை அறிந்தும் அறியாமல் நம்முடன் சேர்த்துக் கொண்டு இருக்கிறோம். மனிதர்கள் பிரார்த்த கர்மாக்கள் மூலம் அதாவது உலக செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். மனிதன் செய்யும் பாவ புண்ணிய கர்மாக்கள் மூலம் பிரார்த்த கர்ம பலன்களை அவன் உடலளவில், மன அளவில் அனுபவிப்பவனாகவும் இருக்கின்றான்.

கர்மாக்கள் சஞ்சித கர்மா, பிரார்த்த கர்மா மற்றும் ஆகாமி கர்மா என மூன்று கர்மாக்கள் இருப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. ஆகாமி கர்மா என்பது இந்தப்பிறவியில் நமது செயல்பாடுகளின் மூலம் புதிதாக சேர்த்துக்கொள்கிற பாவ புண்ணிய கர்மாக்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதனுக்கு அல்லது ஜீவனுக்கு பிரார்த்த கர்மா முடியும்போது மரணம் என்று ஒன்று ஏற்படுகிறது. மனிதன் இறந்தவுடன் இந்த ஜென்மத்தில் அவன் செய்த பாவ புண்ணிய கர்மாக்கள் சஞ்சித கர்மாவில் சேர்ந்து விடுகிறது அல்லது கலந்து விடுகிறது.

பொதுவாக ஒரு ஜீவன் இறந்தவுடன் அவனது பிரார்த்த கர்மா முடிந்து விடுகிறது. அதேபோல் ஆகாமி கர்மாவும் ஜீவன் இறந்தவுடன் முடிந்து விடுகிறது. பிரார்த்த கர்மாவும், ஆகாமி கர்மாவும் முடிந்த பிறகு மீதம் உள்ள சஞ்சித கர்ம மட்டும் அந்த ஜீவனுக்குள் இருக்கிறது. ஜீவனிடம் வெளிப்பட்ட கர்மாவுக்கு பிரார்த்த கர்மா என்று பெயர். அவ்வாறு வெளிப்பட்ட கர்மாவில் அந்த ஜீவனிடம் பாவங்கள் அதிகமாக இருந்தால், மிருக ஜென்மமாக வெளிப்படுகிறது.

மனிதனாக பிறந்த அந்த ஜென்மத்தில் உலக செயல்பாடுகளில் அவன் புதிதாகச் செய்யும் பாவ



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

e-magazine
aanmeegamalar.com

புண்ணிய கர்மாக்களுக்கு ஆகாமி கர்மா என்று கூறப்படுகிறது. எனவே மனிதன் மன அமைதி பெறவும் மனித ஜென்மத்திற்கு கீழான பிறவிகள் பிறக்காமல் இருக்கு வேண்டுமானால் புண்ணிய கர்ம பலன்களை மட்டும் நாம் சேர்க்க வேண்டும். இந்த கர்ம தத்துவத்தை விளக்கும் விதமாக தமிழ் மூதாட்டி ஔவையார் ‘அரிது அரிது மானிடர் ஆதல் அரிது. மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது’ என்று மனித பிறவியின் உயர்வினைப் பற்றி கூறுகிறார்.

பொதுவாக மனிதன் மனதளவில் உடலளவில் அடையும் துன்பங்களை அவன் அனுபவவிக்கும்போது இது நமது தலையெழுத்து என்று விரக்தியாக மனம் சோர்ந்து விடக்கூடாது. தனக்கு வரும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான முயற்சிகளை மனிதன் மேற்கொள்ளவேண்டும். அதாவது நமது கர்மாவிலிருந்து விடுபடுவதற்கு நாம் முழுமையாக முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. அவ்வாறு நாம் முழுமையாக முயற்சிகள் மேற்கொண்டும் கஷ்டத்திலிருந்து விடுபடவில்லையானால்தான் இது நமது பிரார்த்த கர்மா என்று நினைத்து நமது மனதை ஆறுதல்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது இது நமது பிரார்த்த கர்மா என்று மனதில் நினைத்து, அதனை முழு மனதாக ஏற்றுக்கொண்டு மன அமைதியுடன் வாழ்வதற்கு நம் மனதை பக்குவ நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஒவ்வொரு ஜீவனிடத்திலும் பாவ புண்ணிய கர்மா பலன்கள் குவியலாக இருக்கிறது. அதனை சஞ்சித கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த சஞ் சித கர்மாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டும் வெளிப்படுகிறது. அவ்வாறு வெளிப்பட்ட புண்ணிய பாவ கர்மாவுக்கு பிரார்த்த கர்மா என்று பெயர். மனித ஜென்மம் எடுத்து அவன் உலக செயல்பாடுகள் மூலம் புதிதாக பாவ புண்ணிய கர்ம பலன்களை சேர்க்கிறான். அவ்வாறு மனிதன் சேர்க்கும் புதிய பாவ புண்ணிய கர்மாவுக்கு ஆகாமி கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த ஆகாமி கர்மா (புதியதாக சேர்ந்துள்ள பாவ புண்ணியங்கள்) அந்த ஜீவனின் மரணத்திருக்கு பிறகு சஞ்சித கர்மாவுடன் கலந்து விடுகிறது. இவைகள்தான் கர்மா நியதி அல்லது கர்மா தத்துவம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

இந்தக் கர்மா பலன்களைப் பற்றி அறிந்து கொள்வதால் நமக்கு என்ன நன்மை ஏற்படப்போகிறது என்று சிந்தித்துப் பார்த்தால், பொதுவாக நாம் மனிதர்களிடம் பலவிதமான வேற்றுமைகளைப் பார்க்கிறோம். இந்த உலகில் பணக்காரன், ஏழை, பூர்ண சரீரம் பெற்றவன், ஊனமுற்றவன், நோயாளிகள், ஆரோக்கியமானவர்கள் என்று பலவிதமாக பார்க்கிறோம். மனிதப் பிறவியில் பலவிதமான வேற்றுமைகளை இன்றும் உலகில் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இந்த வேற்றுமைகளை நாம் ஏற்றுக்கொண்டு நமது பாவ புண்ணியங்களின் கர்மாவின் பலன் என்று நினைத்து இன்ப துன்பங்களை அனுபவவிக்க வேண்டும்.

இந்த உலகில் குழந்தையாகப் பிறக்கும்போது, ஒரு குழந்தை சிவப்பாகவும், மற்றொரு குழந்தை கருப்பாகவும், சில குழந்தைகள் பிறக்கும்போது நோயுடனும்,சில குழந்தைகள் ஆரோக்கியமாகவும், சில குழந்தைகள் அங்கஹீனமாக பிறக்கின்றன. அதற்குக் காரணம் முன்ஜென்மத்தில் செய்த பாவ புண்ணிய கர்மாவின் அடிப்படையில் அத்தகைய குழந்தைகள் பிறக்கின்றன என்று சாஸ்திரம் கூறுகிறது. அவை ஈஸ்வரனின் விருப்பத்தின் அடிப்படையில் பிறக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவது காரணம் புண்ணிய பாவ கர்மாக்களின் பலன் நாம் அனுபவவிக்கும் ஒவ்வொரு துன்பத்திற்கும் இன்பத்திற்கும் நாம்தான் பொறுப்பு. பாவ புண்ணிய கர்மாக்கள் மனிதனுக்குப் பொறுப்பு என்னும் செயலைக் கொடுக்கிறது. கர்ம தத்துவத்தின்படி ஒவ்வொருவருடைய சுக துக்கங்களுக்கும் அவன்தான் பொறுப்பு ஆகும். நமக்கு உடலளவில், மனதளவில் கஷ்டங்கள் வரும்போதெல்லாம் இதற்குக் காரணம் நமது பாவ கர்மாதான் காரணம் என்று உணர வேண்டும். அவ்வாறு நாம் உணரும்போது உடலளவில், மனதளவில் வரும் கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனபக்குவம் அவனை அறியாமல் அடைந்து விடுவான். அவ்வாறு மனபக்குவம் அடைந்தவுடன் நாம் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!
சப்ஸ்கிரைப் இல்லை!!
மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 175 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# நொய்டா கோவில்களில் தனுர்மாத பூஜைகள் சிறப்பாக கொண்டாடப்பட்டது

e-magazine
aanmeegamalar.com









தனுர் மாத பூஜைகள், அனுமன் ஜெயந்தி, மற்றும் பொங்கல் ஆகிய அனைத்தும் நொய்டா கோவில்களில் கொண்டாடப்பட்டன: ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயர் கோவில், மற்றும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவில், இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

காலையில் மகா அபிஷேகமும், அதைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரம் 62 வது பிரிவில், நடந்தது. அன்றைய தினம் காலை பூஜைகள் மகா தீபாராதனையுடன் நிறைவடைந்து, கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. மாலையில், ஸ்ரீ சாந்த ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் அலங்காரம், இரு கோவில்களிலும் வடைமாலை பிரசாதமும் வழங்கப்பட்டது. மேலும் வெற்றிலை மாலையும் சாத்தப்பட்டது. பதினோரு முறை ஸ்ரீ ஹனுமான் சாலிசா, ஸ்ரீ ஆஞ்சநேயரை துதிக்கும் பல்வேறு ஸ்லோகங்கள், மற்றும் ஏராளமான பக்தர்கள் பக்தி பாடல்கள் பாடுவதைக் காண முடிந்தது.







ஆன்மிகமலர்.காம் வெளியிட்ட 2024ம் வருட காலண்டர் புதுடெல்லி நொய்டாவில் செக்டார் 62ல் உள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் கார்த்திகேயா கோவிலில் பக்தர்கள் முன் வெளியிடப்பட்டது. மேலும் ஸ்ரீ சங்கடஹர கணபதி கோவில், வசுந்தரா என்குலோவ் ஈஸ்ட் டெல்லியிலும் சிறப்பு நிருபர் வெங்கடேசன் அவர்களின் முயற்சியால் வெளியிடப்பட்டது.

கோயில் அர்ச்சகர்கள்: ஸ்ரீ மணிகண்டன் சர்மா, ஸ்ரீ கணபதி, ஸ்ரீ மோஹித் மிஸ்ரா மற்றும் பராமரிப்புப் பணியாளர்கள் அர்ப்பணிப்பு பணிகளையும் கோயில் நிர்வாகம் பாராட்டியது, அவர்கள் அனைவரும் தொழில் முறை நெறிமுறைகளைப் பின்பற்றியது இல்லாமல், ஒரு நாளில், காலையில் நீண்ட நேரம் மின்சாரம் இல்லாத போதும், அவர்கள் குளிர்ந்த நீரில் குளித்து, வழக்கமான பூஜைகள் செய்தனர். மேலும், கடுமையான குளிர் காலத்தை பொருட்படுத்தாமல், அனைத்து நாட்களிலும், தனுர் மாதம் எல்லா நாட்களிலும் ஸ்ரீ பாலாஜி மற்றும் பிற பக்தர்கள், காலையில் கோயிலுக்குச் சென்று, பூஜைகளில் கலந்து கொண்டு உதவினர்.



எஸ்.வெங்கடேசன்

மேலும், மகர விளக்கு முன்னிட்டு, ஸ்ரீ ஐயப்பனுக்கு விசேஷ பூஜைகள் செய்தனர்.

பொங்கலையொட்டி, செக்டார் 62 கோவில் வளாகத்தில் உள்ள சூரியநாராயணனுக்கு சிறப்பு பூஜைகளும், மாட்டுப் பொங்கல் தினத்தன்று, நொய்டா செக்டார் 62ல் உள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேய கோவில் வளாகத்தில் நடந்தது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண்: 9811161370

e-magazine
aanmeegamalar.com

# இராமர் கோவில் அடிக்கல் விழாவிற்கு வரவேற்பு அளித்த தலைவர்கள்

2020 ஆகஸ்ட் 5 அடிக்கல் இராமர் கோவில் அடிக்கல் விழாவிற்கு இந்திய அரசியல் தலைவர்கள் வரவேற்பு அளித்தனர்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படுவதற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் பூமி பூஜை விழாவுக்கு பல அரசியல் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்திருந்தனர்.

ஆனால் தற்போது 2024ம் ஆண்டு தேர்தல் ஜூரம் ஏற்பட்டதால் ஒருசில தலைவர்கள் கலந்து கொள்ள போவதில்லை என்று இந்து மக்களுக்கு எதிரானவர்களாக மாறியுள்ளனர்.

அந்த வகையில் அடிக்கல்லிற்கு ஆதரவு தெரிவித்த அரசியல் தலைவர்கள்.

## பிரியங்கா காந்தி

காங். பொதுச் செயலாளராக இருந்த பிரியங்கா காந்தி தனது வாழ்த்து செய்தியில் “எளிமை, தைரியம், கட்டுப்பாடு, தியாகம், அர்ப்பணிப்பு ஆகியவை ராமர் என்ற பெயரின் சாராம்சமாகும். ராமர் எல்லோரிடமும் இருக்கிறார். ராமர் மற்றும் சீதையின் அருளால், ராமர் கோயிலின் பூமி பூஜை விழா தேசிய ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் கலாச்சார நிகழ்வுக்கான விழாவாக மாறியுள்ளது” என்று குறிப்பிட்டிருந்தார்.

## மம்தா பானர்ஜி

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, “மேரா பாரத் மஹான், மஹான் ஹமாரா இந்துஸ்தான். நம் நாடு வேற்றுமையில் ஒற்றுமைஎன்ற வழிவந்தது, இதனை நாம் உயர்த்திப் பிடித்தே வந்துள்ளோ. இந்தக் கொள்கையை நம் இறுதி மூச்சு வரை காப்பாற்ற வேண்டும்” என்று அப்போதைய ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

## அரவிந்த் கேஜ்ரிவால்

டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், “பகவான் ராமரின் அருள் நமக்கு தொடர்ந்து கிடைக்கட்டும், அவருடைய அருளால் நாடு வறுமையிலிருந்தும் ஏழ்மையிலிருந்தும் விடுபட்டு இந்தியா உலகின் சக்தி வாய்ந்த நாடாக எழுச்சிபெற்று வரும் காலங்களில் உலகிற்கே வழிகாட்டட்டும். ஜெய் ஸ்ரீராம், ஜெய் பஜ்ரங்பலி” என்று ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

## ரவிசங்கர் பிரசாத்

மத்திய அமைச்சரும் பாஜக தலைவருமான ரவிசங்கர் பிரசாத், “மகா ராமர் கோயில் நாட்டின் கோயிலாகும். இது இந்தியப் பெருமையை, சுயமரியாதையை, நம் ஆன்மீகப் பாரம்பரியத்தைக் கொண்டாடுவதாகும்.” என்று பேட்டி அளித்திருந்தார்.

## ரந்தீப் சுர்ஜேவாலா

அப்போதைய காங்கிரஸ் தலைமை செய்தித் தொடர்பாளரான ரந்தீப் சுர்ஜேவாலா, “பகவான் ராமர் அருளிய தியாகம், கருணை, பெருந்தன்மை, ஒற்றுமை, சகோதரத்துவம், கடமை ஆகிய லட்சியங்கள் நாட்டை வழிநடத்தும் சக்தியாகும் என்று நாம் நம்புகிறோம்” என்றார்.

## அசோக் கெலாட்

அப்போதைய ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், “நம் பண்பாடு மற்றும் நாகரீகத்தில் பகவான் ராமர் தனித்துவமான இடம் பிடித்துள்ளார். அவரது வாழ்க்கை உண்மை, நீதி, சமத்துவம், கருனை மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை நமக்கு கற்றுக் கொடுக்கிறது. பகவான் ராமர் மதிப்பீடுகளின் படி நாம் சமத்துவ சமுதாயம் படைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்” என்றார்

## அகிலேஷ் யாதவ்

சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், இன்றைய, எதிர்கால சந்ததியினர் ‘மரியாதை புருஷோத்தமர்’ காட்டிய வழியில் நடப்பார்கள், அது நம் அனைவருக்கும் அமைதியை வழங்குவதாகும்’ என்றார்.

## சசி தரூர்

காங்கிரஸ் தலைவர் சசி தரூர், “பகவான் ராமர் அனைவருக்கும் நீதி, தார்மீக நெறி, நியாயம் மற்றும் அறநீதியான நடத்தை, அதில் தைரியம் ஆகியவற்றைக் குறிக்கிறார். இவை நாடுமுழுதும் பரவும் போது சகிப்பின்மையின் வெற்றி பெருமிதக் கூச்சல்களுக்கான தருணமாக இருக்காது, ஜெய் ஸ்ரீராம், என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

e-magazine
aanmeegamalar.com



# திருப்பதி வெங்கடாஜலபதி சார்பில் அயோத்தி ராமருக்கு ஒருலட்சம் லட்டு விநியோகம்

திருப்பதி திருமலையில் உள்ள ஏழுமலையான் கோவிலில் தயாரிக்கப்படும் லட்டுகள் விஷேச மானது.

ஏழுமலையானே லட்டுபிரசாதம் தருவதாக பக்தர்களால் இன்றைக்கு நம்பபட்டு வருகிறது. தற்போது அயோத்தியில் நடைபெறும் ராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் இருந்து தலா ஒரு லட்சம் லட்டுக்கள் அயோத்திக்கு அனுப்பி வைக்கப்படும் என திருப்பதி தேவஸ்தான போர்டு அறிவித்தது.

அயோத்தியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ராமர் கோயிலின் கும்பாபிஷேகம் மற்றும் கோயில் திறப்பு விழா ஜனவரி 22ம் தேதி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

இதற்காக பல்வேறு தரப்பினருக்கும் ஸ்ரீராம ஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா சார்பில் அழைப்பிதழ் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நாடு முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோயிலில் இருந்து ஒரு லட்சம் லட்டுக்கள் அயோத்திக்கு அனுப்பி வைக்கப்படும் என திருப்பதி தேவஸ்தான போர்டு அறிவித் து அனுப்பியுள்ளது.

இது குறித்து அதன் நிர்வாக அதிகாரி ஏ.வி தர்மா ரெட்டி கூறுகையில், “ஜன.,22ல் ராமர் கோயிலின் பிரம்மாண்ட திறப்பு விழாவிற்காக முழு தேசமும் ஆவலுடன் காத்திருக்கிறது.

கடவுள் வெங்கடேஸ்வரரும், ராமரும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் அவதாரங்கள்.

விழாவில் பங்கேற்கும் பக்தர்கள், வி.வி. ஐ.பி.,க்களுக்கு திருப்பதி தேவஸ்தானம் தரப் பில் தலா 25 கிராம் எடைக்கொண்ட ஒரு லட்சம் லட்டுகள் விநியோகிக்கப்படவிருக்கிறது” என் றார்.

திருமலை வெங்கடாஜலபதியே அயோத்தி ராம பக்தர்களுக்கு லட்டை பிரசாதமாக வழங்குவதாக இந்த நிகழ்வு போற்றப்படுகிறது.

e-magazine
aanmeegamalar.com

# இந்துக்களின் உயிருக்கும் மீறிய ஒரு தொடர் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியே

# அயோத்தி இராமர் கோவில்

e-magazine
aanmeegamalar.com



## அயோத்தி பிரச்சனை ஏற்பட்ட வரலாறு...?

அயோத்தி ராமர்கோவில் என்பது பாஜக தொட்டு உருவான விஷயம், அவர்களின் அரசிய லுக்கு அடிப்படை காரணமாக உருவாக்கபட்ட விஷயம் என ஒரு பிம்பம் தமிழகத்தில் உண்டு

உண்மை அது அல்ல, காலம் காலமாக சுமார் 500 ஆண்டாகநடந்த போராட்டத்தை, பிரிட்டிசாரும் காங்கிர சும் உத்திரபிரதேச மாகாண கட்சிகளும் அடக்க நினைத்த போராட்டத்தை, இந்துக்கள் 500 வருடமாக உணர்வுபூர்வமாக உணர்ச்சி பூர்வ மாக நடத்திய போராட்டதினை 1980களில் ஆதரித்த கட்சி பாஜக.

அதுவும் ராமர்கோவில் விவகாரத்தில் ராஜிவ் ஏதோ சொல்லபோக அதன் பின்புதான் அதனை பாஜக கையில் எடுத்தது அந்த போராட்டம் நீண்டது, உருக்கமானது, பல இடங்களில் கண்ணீரை வரவழைப்பது.






அப்படி என்ன பாவம் இந்துக்கள் செய்தார்கள் என்றால் அவர்கள் இந்துக்களாக இந்துஸ்தானில் பிறந்தது முதல் பாவம், ஒரு இந்து பெரும் பேரரசு அமைந்து வலுவான ராஜ்ஜியமாக விளங்கி அந்நியரை விரட்டியடிக்காமல் போனது அடுத்த பாவம்

கஜினி தொடங்கி வைத்த கொள்ளைகள், அரேபிய துருக்கி பின்னணியில் ஆப்கானியர் நடத்திய கொள்ளைகள் கோரி காலத்தில் ஆட்சியாக வந்தது, பின் கில்ஜி காலத்தில் இந்து ஒழிப்பு இந்து ஆலய ஒழிப்பாக தொடங்கிற்று

அவர்களுக்கு ஏகபட்ட சுல்தானிய வல்லரசுகள் உஸ்பெக், துருக்கி, பாரசீகம் என பின்னணியில் இருக்க இந்துக்களுக்கு யாருமில்லை, இந்து பேரரசுகளுமில்லை குறிப்பாக இந்து மன்னர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாமல் போனது.

ராஜபுத்திரர்கள் சிதறி கிடந்தார்கள், ஆனால் பெரும் ஆபத்தென்றால் ஆப்கானியரை எதிர்த்தார்கள் எனினும் இந்து பேரரசு அமையாதது பெரும் பலவீனமாக இருந்தது.

இந்த பலவீனத்தில் கில்ஜி, துக்ளக் என யாரெல்லாமோ ஆண்டு கடைசியில் இப்ராஹிம் லோடி அட்டகாசம் செய்துகொண்டிருந்தான், அவனை ஒழிக்க பாபரை ஒரு கூலிபடையாக ராஜபுத்திரர்கள் அழைத்துவர, பீரங்கி சகிதம் வந்தவன் லோடியினை வீழ்த்திவிட்டு அவன் அமர்ந்துகொண்டான்.

அவனையும் எதிர்த்து ராணா சங்கா போன்ற ராஜபுத்திரர்கள் வீரபோர் புரிந்தார்கள், அவர் களையெல்லாம் தந்திரமாக கொன்றுவிட்டு இனி இந்துஸ்தானம் தனக்கு என அமர்ந்துகொண்டான் பாபர்.

அவனை பல மன்னர்கள் ஏற்கவில்லை ஆனாலும் அவனுக்கு உஸ்பெக் போன்ற பெரும் அரசுகளின் பின்புலம் இருந்ததாலும், இன் னும் ஆப்கானிய கொள்ளையர்களை அவன் கட்டுபடுத்துவான் என்ற நோக்கம் இருந்ததாலும் பலர் தயங்கினார்கள்.

அந்த பாபர் இந்துஸ்தானத்தில் ஒரு பெரும் அரசை அமைக்க விரும்பினான்,அதற்கு இந்துஸ்தானத்தை மிக நன்றாக படித்தான் அவனுக்கு முன் எந்த பெரும் ஆப்கானிய அரசும் நிலைத்ததில்லை, இந்துக்களின் பெரும் எதிர்ப்பு அதை செய்தது.

அவன் இந்துஸ்தானத்தின் ஆணிவேர் இந்துமதம் என்பதையும் இந்துக்கள் வாழ்க்கையில் அது எப்படி ஆழ ஊடுருவிருக்கின்றது என்பதை யும் அறிந்து இந்துஸ்தான சாயலில் தன் கலாச் சாரத்தை புகுத்த விரும்பினான்.

அப்போது அவனின் தேர்வு ராமனின் பெயரும் புகழுமாய் இருந்தது.

இந்துஸ்தான அரசர்களெல்லாம் ராமனின் பெயரால் முடிசூடி ராமராஜ்யம் அமைப்பதையே கொள்கையாய் கொண்டிருந்தனர், வடக்கே பல மன்னர்கள் அயோதிக்கு வந்து வழிபட்டு ராமன் பெயரால் முடிசூடுவதை வழமையாய் கொண்டிருந்தனர்.

தானும் அதில் பங்கெடுப்பதாக சொல்லி நுழைந்தான் பாபர், இந்துக்கள் புனிதமாக கருதும் இடத்தில் தனக்கும் பங்குவேண்டும் தானும் ஒரு இந்துஸ்தானி என புகுந்தான்.

அவன் ஆட்சிக்காக இந்துஸ்தானி என

சொன்னானே தவிர மதத்தாலும் இனத்தாலும் அந்நியனாய் இருந்தான் அதைவிட்டுகொடுக்க அவனால் முடியவில்லை

இந்துக்கள் புனிதமாக வழிபடும் இடத்தில் நாங்களும் வழிபடுவோம் இனி இங்கு பாபரின் ஆட்சி என அவன் குழப்ப தொடங்கினான்.

அவன் இந்துஸ்தானில் நிம்மதியாக இருந்தான் என சொல்லமுடியாது பெரும் கலகமும் எதிர்ப்பும் அவனுக்கு எதிராக நடந்துகொண்டே இருந்தன, இந்துக்கள் எதிர்ப்பை தெரிவித்துகொண்டே இருந்தனர், மேவார் ராஜபுத்திரர்கள் உள்ளிட்ட பலர் அவனை எதிர்த்து கொண்டே இருந்தனர்

ஆனால் அவனின் பலம் அராபியாவில் ஆப்கானில் உஸ்பெக்கில் துருக்கியில் இருந்தது, பெரும் சேனையினை அவனால் திரட்டமுடிந்தது

அப்படி திரட்டியவன் பல போர்களை செய்துகொண்டே இருந்தான், அப்போதுதான் அயோத்தியில் தங்களுக்கும் பங்கு வேண்டி அந்த கோவிலில் கால் வைத்தான்

அயோத்தி ஆலயம் பலமுறை இடிக்கபட்டது, கஜினி காலம் முதல் பலர் இடிக்க இடிக்க இந்துக்கள் கட்டிகொண்டே இருந்தார்கள், அப்படி ஒரு சிறிய ஆலயம் அங்கே இருந்தது

அதன் பூஜாரியாக பாபா ஸ்ரீ ஷ்யாமாநந்த மஹராஜ் என்பவர் இருந்தார், அது 1528ம் வருடாமாக இருந்தது

பாபரின் விருப்பபடி முதலில் அயோத்திக்கு வந்தவன் க்வாஜா அப்பாஸ் மூசா என்ற தளபதி அவன் ஸ்ரீ ஷ்யாமாநந்த மஹராஜ் என்பவருடன் பேச்சுவார்த்தை நடத்த வந்தான், அவனுக்கு அந்த ஆலயம் மேலும் பூசாரி மேலும் ஒரு அபிமானம் ஏற்பட்டுவிட அவன் இவரின் சீடனாக மாறிவிட்டார்

ஆன்மிகமலர்

பாபர் இதனை எதிர்பார்க்கவில்லை, துரோகி என அந்த தளபதியினை அறிவித்து அவனை கொல்ல ஜலால் ஷா என்பவனை அனுப்பினான்.

பாபருக்கு ஏகபட்ட போர்கள் செய்யும் அவசியம் இருந்ததால் அப்போது நேரடியாக மோத எண்ணமில்லை, இதனால் இந்த ஜலால்ஷா பூசாரிக்கு இன்னொரு சீடன் போல் வந்து உளவாளியாக புகுந்து கொண்டான்.

பாபர் சில யுத்தங்களில் வென்று தன்னை நிறுத்தியதும் தளபதி மீர்பாக்கி கானிடம் (Meerbaki Khan) என்பவனை படையோடு அனுப்பினான்

அவனே வலுகட்டாயமாக பள்ளிவாசல் அமைக்க முதல் மிரட்டலை விடுத்தான், பூஸாரி ஷ்யாமாநந்த மஹராஜ் பெரும் போரை துவக்கினார்

ஆனாஅல் உள்ளே சீடன் வேடத்தில் இருந்த ஜலால்ஷா பெரும் குழப்பம் செய்ய ஷ்யாமாநந்த மஹராஜுக்கு தோல்வி கிடைத்தது

17 நாள் பெரும் போருக்கு பின் இனி ஆலயத்தை காக்கமுடியாது என உணர்ந்த ஷ்யாமாநந்த மஹராஜ் புனிதமான விக்கிரங் களுடன் தப்பி சென்றார் அதை பலத்த ஏற்பாட்டில் காகக் ஏற்பாடு செய்தார்

(அதுதான் இப்போது கன்னட மடத்தில் இருப்பதாகவும், இப்போது கட்டபட்டிருக்கும் புதிய ஆலயத்தின் சன்னதியில் வைக்கபட இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.)

அயோத்தி ஆலயம் இடிபட்டபோது, ஷ்யாமாநந்த மஹராஜ் விக்ரகத்தோடு தப்பியபோது தெற்கே நாயக்க அரசு இருந்ததால் இதுதான் பாதுகாப்பு என அந்த சிலைகள் இங்கே கொண்டு வரபட்டன

500 வருடமாக அதை காக்க இந்துக்கள் படும்பாடு துக்ளக் காலத்தில் திருவரங்க நாதன் சிலையினை காகக் அந்த மக்கள் எதிர்கொண்ட பெரும் துயரத்துக்கு ஈடானது.

இந்துக்கள் அப்போது அல்ல, நீண்ட காலமாகவே ஆலய இடிப்பையும் பின் மீள கைபற்றி ஆலயம் கட்டுதலையும் செய்துகொண்டே இருந்தவர்கள் என்பதால் எப்போதும் மூல சிலையினை மட்டும் பாதுகாப்பது வழமையாய் இருந்தது.

ஆலயம் போனால் கட்டலாம் ஆனால் சிலை முக்கியம் என்பதால் அதைத்தான் பெரிதும் காத்தனர், அப்படி இந்த பாலராமர் சிலையும் காக்கபட்டது. எனினும் அந்த தளபதி மீர் பாக்கி ஷ்யாமாநந்த மஹராஜை கண்டறியமுடியவில்லை சிலைகள் மாயமாயின என்பதை அவன் அறிந்து கொதித்தான்.

அவன் அங்கே நிலை கொண்ட செய்தி அங்கிருந்த பித்தி அரசன் ராஜா மெஹ்தாப் சிங் கிறு கிடைத்தது, அயோத்திக்கு தெற்கே சுமார் 50 மைல் தொலைவில் அவன் அரசு இருந்தது

அந்த பித்தி ராஜா மெஹ்தாப் சிங் பெரும் படையோடு வந்தான் சுமார் 2 லட்சம் இந்துக்கள் திரண்டனர், ஆனால் வலுவான பாபர் படையுடன் அவர்கள் திணறினார்கள், பெரும் அழிவு நடந்தது

இருமாதம் போர் தொடர்ந்தது, பாபர் அராபிய ஆப்கானிய தொடர்பில் பெரும் படையோடு முரட்டு படையோடு வந்ததால் அழிவுகள் அதிகரித்தன, 2 லட்சத்துக்கும் மேலான இந்துக்கள் கொல்லபட்டு மெஹ்தாப்சிங்கும் கொடூரமாக கொல்லபட்டான்.

இந்த ரத்தத்தின் மேல்தான் பின் மசூதி கட்டபட்டது, இனி ராமன் ஆலய நினைவோ பெயரோ இருக்க கூடாது என கட்டபட்டது

வரலாற்றில் இது அதிசயமல்ல, எகிப்தில் பழைய எகிப்துமத ஆலயங்களை இடித்து அலெக்ஸாண்ட்ரியா என தன் பெயரை இட்டு ஒரு நகரை எழுப்பினான் அலெக்சாண்டர்



யூதர்களின் கோவிலை ஜெருசலேமில் இப்படி மாற்ற முயன்றான் நெபுகாத் நேச்சர், இன்னும் பல விஷயம் வரலாற்றில் உண்டு

அகஸ்டஸ் சீசர் காலத்தில் யூத ஆலயம் இடிக்கபட்டதும் அப்படித்தான்

ஒரு நாட்டை கைபற்றும்போது அங்கிருக்கும் எல்லாவற்றையும் அதன் தாத்பரியத்தையும் அழித்து தங்கள் மத அதிகாரத்தை நிறுத்துவது அரசர்கள் காரியம்

அதைத்தான் பின்னாளில் அமெரிக்க கண்டத்தில் பிரிட்டிசார் செய்தார்கள், பாபரின் தளபதி அதைத்தான் செய்தான் அது மதரீதியான தாக்குதல் என்பதைவிட அரசை நிலை நிறுத்தும் முயற்சி என்றேதான் வரலாறு சொல்கின்றது.

பள்ளிவாசலை கட்டியவன் இந்துக்களுக்கு எதுவுமில்லை என மறுத்து கூடுதலாக அந்த வளாகத்தில் கல்லறை தோட்டம் அமைக்க ஆரம் பித்தான்.

ஆன்மிகமலர்

இது இன்னும் ஆத்திரத்தை கிளறிற்று, இந்துக்கள் அடுத்த போருக்கு தயாரானார்கள்

சனேது நகர பிரமாணர் தேவதீன் பாண்டே போரை தொடங்கினார், அவர் பல்வேறு ராஜ புத்திரர்களையும் அழைத்தார். ராமர் கோவிலை இடித்து, சுடுகாடாக மாற்றுகிறார்கள். இந்தக் கொடுமையை மௌனமாகப் பார்ப்பதை விட ஸ்ரீராமனுக்காக உயிரை விடலாம், நான் ரிஷி பரத்வாஜரின் வம்சம் (பரத்வாஜர் வால்மீகியின் சிஷ்யர்), நீங்கலெல்லாம் சூர்ய வம்சத்தவர்கள், நாம் இணைந்து போரிடாவிட்டால் இந்துஸ்தானம் நமக்கல்ல என அவர் துணிச்சலுடன் போரை தொடங்கினார்

அந்த பிரமாணர் பெரும் வெற்றி பெற்றார், ஐந்து நாள் போரில் அவர் பல மொகலாய தளபதி களை கொன்று அந்த மீர் பாக்கியினை நேருக்கு நேர் சந்தித்து கொல்லும் அளவு சென்றார், ஆனால் கோழைத்தனத்தையே கொள்கையாக கொண்ட, தந்திரமிக்க மீர் பாக்கி தன் சிப்பா யினை அவரின் பின்னால் இருந்து தாக்க செய்து அவரை வீழ்த்தினான்.

சுமார் ஆயிரம் பேரை கொன்று வீழ்ந்தார் அந்த தேவதீன் பாண்டே, இப்போதும் லட்சம் இந்துக்கள் கொல்லபட்டனர்.

சராயு நதிக்கு ஈடாக ஒரு ரத்த ஆறு ஓடிற்று அத்தோடு போராட்டம் முடியவில்லை சில நாட் களில் ஹன்ஸ சமஸ்தான மன்னன் ராஜா ரண விஜய் சிங், 25 ஆயிரம் பேருடன் வந்து 4 லட்சம் பேர்கொண்ட மீர் பாக்கி படையோடு மோதினான்.

பத்து நாட்கள் நடந்தபோரில் அவன் படை யோடு அவனும் வீழ்த்தபட்டான். ஆனால் இந்துக்கள் சிறிதும் பெரிதுமாக போர்களை நடத்தினார்கள்.

## இந்துக்கள் தோற்றுபோக ஒரே காரணம் கடைசிவரை அறவழிபோர்

செய்தார்கள், ஆயுதம் இல்லாதவனை தாக்க கூடாது, மறைந்திருந்து அடிக்க கூடாது, இரவில் போர் செய்யகூடாது, காலாட்படை வீரனை குதிரை யானையில் இருந்து தாக்க கூடாது, எதிரி படை குதிரைகளை தொடகூடாது என எல்லாமே தர்மம்

ஆனால் பாபர் தரப்பு அதற்கு தலைகீழாக போரிட்டாலும் இந்துக் கள் அறத்தைவிடவில்லை, அழிந் தாலும் அறத்தோடு அழிந்து தாக்கு பிடித்தார்கள்.

பாபர் இந்துஸ்தானில் நான்கு ஆண்டுகளே ஆட்சிசெய்தான் அதற்குள் அவன் மரணம் சம்பவித்தது, அவன் மரணத்துக்கு பின் இந்துக் கள் சீறி எழுந்தனர் பெரும் போர் வெடித்தது

ஜென்மஸ்தான் மசூதி என மொகலாயர்களால் சொல்லபட்ட மசூதி அருகே ராமனுக்கு குடிசை போட்டு பின் சிறியகோவில் கட்டி தங்கள் உரிமை யினை இந்துக்கள் விடாபிடியாக காட்டிகொண்டே இருந்தார்கள்


பாபருக்கு பின் குழப்பம் அதிகரித் தது, ஆனாலும் ஹுமாயுன் எனும் பாபரின் மகன் தாக்குபிடிக்கலாம் என நம்பினான், ஆனால் இந்துக்களின் உக்கிரப்போர் முன் அவன் தடுமாறி னான்

ஹுமாயுன் காலத்திலும் அயோத்தி யில் பெரும் யுத்தங்கள் தொடர்ந்தன

இந்துக்களுக்கு அயோத்தி என்பது இடமல்ல உணர்வு என்பதும், ராமன் என்பவன் தெய்வம் மட்டுமல்ல உயிரில் கலந்தவன் என்பதையும் தொடர்ந்த போர்கள் காட்டிகொண்டே இருந்தன

சிறிதும் பெரிதுமாக பல்நூறு போர்கள் நடந்தாலும் 76 யுத்தங்கள் கடுமையானவை, 1530 முதல் 1934 வரை சுமார் 400 ஆண்டுகள் நடந்த போர்கள் அவை.

எந்த இனமும் செய்யாத வீரமிக்க உணர்ச்சிபோரை இந்துக்கள் அவ்வளவு தீவிரமாக தொடுத்து நடத்தினார்கள்,




விழ விழ எழுந்து அடித்துகொண்டே இருந்தார்கள்.

உண்மையில் அயோத்தியா என்பது இந்துக்களின் பல கட்ட போராட்டம் என்பதைவிட, இந்துக்களின் உயிருக் கும் மீறிய ஒரு தொடர் போராட்டம் என்று கூறினாலும் வியப்பில்லை.

500 வருடத்திற்கு மேல் இந்துக்களின் விடா முயற்சி, நேர்மை, நியாயம், சகிப்புத்தன்மை போன்றவற்றிற்கு 2024ல் வெற்றி கிடைத்துள்ளது. நியாயமான வெற்றி இது.

இந்துக்கள் பலருக்கு, நமது முன்னோர்கள் கோவில்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்தைப் பற்றி தெரியாததாலும், இந்து மதத்தை காக்கும் நோக்கில் பாடுபடுபவர்களுக்கு எதிரான மனோ நிலையை மாற்றிவைத்துள்ளனர் இந்து எதிர்ப் பாளர்கள்.

இப்போதும் பலரின் எதிர்ப்பு மறைமுகமாக இருந்தாலும், இராமன் கம்பீரமாக எழுந்து நிற்கி றான் அயோத்தியில்.

e-magazine
aanmeegamalar.com

# பக்தனிடம் இருப்பது பக்தி மனிதனிடம் இருப்பது புத்தி

சீடன்: ஞானம் நம்பிக்கையினால் வருமா?

ஞானி: தாராளமாக. நம்பிக்கை உயிருக்கு பயன் தரும் என்று எண்ணும்பொழுது.

சீடன்: குருநாதர்களிடமிருந்து இந்த ஞானம் வர முடியுமா?

ஞானி: பணக்காரனிடம் இருந்து பணம்வரும் என்ற நம்பிக்கையே மனிதனுக்கு வரும்போது கருணையே உருவான ஞானிகளிடமிருந்தும், பக்தர்களிடமிருந் தும் ஞானமும் பக்தியும் ஏன் வராது?

சீடன்: உலக நெருக்கடியை தீர்க்க ஞானிகளின் அறிவுரை என்ன?

ஞானி: உலக மக்கள் அனைவரும் கடவுளிடம் அன்பு செலுத்தி பக்தி செய்தால்நெருக் கடி தீரும். பக்தியின்மையே நெருக் கடிக்கு காரணம்.

சீடன்: கடவுள் பெயரைச் சொன்னால் மட்டும் போதுமா?

ஞானி: முருகா, இராமா என்ற பெயர்கள் சிறிய விளக்காகத் தோன்றலாம். நம்பிக் கையுடன் உணர்ந்தால் அதுவே கோடி சூரிய ஒளி.

சீடன்: தெய்வீகம், லௌகீகம் என்ன வித்தி யாசம்?

ஞானி: சிந்தனை, மனம், புத்தி, சித்தத்துடன் கலந்து செயல்படும்போது தெய்வீகம். இந்திரியங்களுடன் மூளை கலந்து செயல்படும்போது லௌ கீகம்.

சீடன்: பக்தன் என்பவன் யார்?

ஞானி: உலகின் உண்மையான அறிவைப் பெறுகிறவன்.

சீடன்: இதற்கு குரு தேவையா?

ஞானி: ஆண்டவனிடம் மனதை வைக்கும் பயிற்சியை எங்கு பெறுகிறான் என் பதே முக்கியம். அந்த இடமே குருகுலம்.

சீடன்: குருநாதன் என்பது யார்?

ஞானி: எல்லாவற்றிற்க்கும் முடிவு இருக்கிறது, தெளிவு இருக்கிறது என்று சொல் பவனே குரு.

சீடன்: பிரம்மச்சாரியாக இருந்தால் தான் சாதகனாக முடியுமா?

ஞானி: எந்த ஆசிரமம் ஆனாலும் அதன் உண்மையை உணராமல் வாழ்பவன் கஷ்டப்படுவான்.

சீடன்: இதில் கருத்து வேற்றுமை வருமா?

ஞானி: வராது. வல்லவனுக்கு வல்லவன் என்ற சண்டை வரும். பக்தனுக்கு பக்தன் என்ற சண்டை கிடையாது.

சீடன்: உலக வாழ்க்கை முக்கியமில்லையா?

ஞானி: இது பொருள் உலகம் என்பதால் உலக முக்கியத்துவத்தைப் பற்றி எல்லோரும் தான் சொல்கிறார்கள். பொருள்கள் மத்தியில் இருக்கும் பரம்பொருளை உணர்ந்தால் வாழ்க்கை இனிக்கும்.

சீடன்: அப்படியனால் கிருகஸ்தாஸ்ரமும் முக் கியமானதுதானே?

ஞானி: ஒவ்வொரு ஆசிரமத்திலும் ஒரு பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த பொருள் இல்லாத வரை அந்த ஆசிரமம் சிறக்காது. அந்த பொருளை உணர்ந்து அமைதி அடைய வேண்டும்.

சீடன்: சுகம் அடைய கஷ்டப்பட வேண்டுமா?

ஞானி: சுகத்தை அனுபவிக்கும் மனிதன் கஷ்டப்படுகிறான்; ஆனால் அது மறைக் கப்படுவதால் தெரி வதில்லை.

சீடன்: இது ஏன் அனை வருக்கும் தெரிவதி ல்லை?

ஞானி: பேரறிவு கொண்ட ம னி த ர் க ள ா க இருந்தாலும் சிற்ற றிவு கொண்ட ம னி த ர் க ள ா க



e-magazine
aanmeegamalar.com

வாழ்வதால்.

சீடன்: இறைவன் ஏன் அவ்வளவு முக்கியமானவன் ஆனான்?

ஞானி: ஆத்மாவின் தலைவனான இறைவன் ஆத்மாவுக்கு துணையாக உள்ள உற்ற நண்பன், அதனால் ஆத்மா விற்கு மாத்திரம் ஆரோக்கியத்தைத் தருபவனல்ல கடவுள். உடல், பொருள், ஆவி அனைத்துக்கும் காப்பு அவனே.

சீடன்: மனிதன் அவ்வளவு முக்கியமாக முடியாதா?

ஞானி: மலமில்லாத மனிதன் இருந்தால் அவனே கடவு ளாவான்.

சீடன்: பின் ஏன் மனிதன் பயப்படுகிறான்?

ஞானி: மனிதனுடைய பலம் உலகத்திலுள்ள எந்த பொருட் களிலும் இல்லை, கடவுளை மறுத்ததினால் தான் சூழ்நிலை பயம் அவனுக்கு ஏற்படுகிறது,

சீடன்: சூழ்நிலை பயத்தினால் தான் கடவுளை நினைக்க முடியவில்லை?

ஞானி: சூழ்நிலை பயத்தினால் பாதிக்கப்பட்ட நீ உப்பு, புளி, மனைவி, குடும்பத்தை மறக்கவில்லையே. கடவுளை மாத்திரம் ஏன் மறந்தாய்?

சீடன்: மறக்கவில்லையே, பூஜைகள் செய்துகொண்டு இரு க்கிறோமே?

ஞானி: பக்தர்களின் உள்ளம் தான் ஆண்டவனுக்கு, நினைக்காத உன் பூஜை, அபிஷேகம், கோயில் எல்லாம் செயற்கை.

சீடன்: எதைப் பார்த்தாலும் சந்தேகம் வருகிறதே?

ஞானி: எந்த மார்க்கத்திற்குப் போவதற்கு முன்னாலும் மனிதனுக்கு வருவது சந்தேகமே. அதை தீர்த்து வைப்பதே அறிவு.

சீடன்: விருப்பம் எப்பொழுது வரும்?

ஞானி: கடவுள் வேண்டும் என்ற அபிப்பிராயம் வந்தால்.

சீடன்: விருப்பம் எப்பொழுது வராது?

ஞானி: பக்தி தேவை இல்லை என்று எண்ணும்போது.

சீடன்: கருத்துக்களை எப்படி வாங்கிக் கொள்ள வேண்டும்?

ஞானி: எந்தக் கருத்தையும் உடனே தலையில் வைக்காதே. காதால் நன்றாகக் கேட்டுக் கொள். புரிந்து கொள் ளாமல் தலையில் போட்டால் வெறி பிடிக்கும். தெரு நாயாக இருந்தாலும் விட்டு நாயாக இருந்தாலும் கடித்தால் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

## குழந்தை ராமரை அகற்ற சொன்ன நேரு முடியாது என மறுத்த மாஜிஸ்திரேட் கே.கே.நாயர்

# இராமஜென்ம பூமி தீர்ப்புக்கு அடித்தளமாக இருந்த முதல் நபர்



அயோத்தி ராமர் கோவில் வெற்றிகரமாக அமைந்தாலும், அதற்கு போராடிய பல ஆயிரம் பேர்களில் ஒருவரை நாம் அவசியம் மறக்க கூடாது, ஸ்ரீராமஜென்ம பூமி நமக்கு கிடைக்க காரணமாக இருந்த இந்த நாயகனை அவசியம் நினைவு கூறியே ஆகவேண்டும்.

அவர வேறு யாருமல்ல கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஸ்ரீ கே.கே.நாயர், இவரின் முழுப்பெயர் கண்டங்கலம் கருணாகரன் நாயர் சுருக்கமாக கே.கே.நாயர் என்று அழைக்கப்பட்டவர்.

இவர் கேரளா ஆலப்புழா, குட்டன்காடு என்ற சிறிய கிராமத்தில் 1907 செப்டம்பர் 7ல் பிறந்தவர்

பாரதம் சுதந்திரம் அடைவதற்கு முன்பே இங்கிலாந்து சென்று தன் 21 வது வயதில் பாரிஸ்டர் பட்டமும், ICS படித்து மீண்டும் தாயகம் திரும்பினார்.

கேரளத்தில் சிறிது காலம் பணியாற்றி நேர்மைக்கும், துணிச்சலுக்கும் பெயர் பெற்ற இவர் மக்களின் சேவகர் என பெயர் எடுத்தவர்.

அதன் பின் 1945 ல் உத்திரபிரதேச மாநிலத்தில் அரசு ஊழியராக சேர்ந்தார். பல இடங்களில் பணியாற்றிய இவர் பைசாபாத் துணை ஆணையர் மற்றும் மாவட்ட மாஜிஸ்திரேட் ஆக ஜுன் 1, 1949 அன்று பதவியேற்றார்.

அப்பொழுது அயோத்யாவில் குழந்தை ராமர் விக்ரஹம் திடீரென வைக்கப்பட்டுள்ளதாக வந்த புகாரை அடுத்து விசாரித்து அறிக்கை அளிக்க, தன் கீழ் பணிபுரியும் ஸ்ரீ குரு தத் சிங் என்பவருக்கு அங்கு சென்று ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு கேட்டுகொள்கிறார்.






அந்த சிங் அங்கு சென்று பார்த்து ஓர் விரிவான அளிக்கையை கே.கே.நாயருக்கு அளிக்கிறார். அதில் அங்கு ராமர் பிறந்த இடமாக (ராம் லல்லா) ஹிந்துக்கள் வழிபடுகின்றனர். மேலும் மசூதி இருப்பதாக இஸ்லாமியர்கள் பிரச்சனை செய்கின்றனர்.

அது ஹிந்து கோவில் தான். அது சிறிய இடமாக இருப்பதால் அங்கு பெரிய கோவில் கட்டவேண்டும். அதற்கு அரசு நிலம் ஒதுக்க வேண்டும் எனவும், இஸ்லாமியர்கள் அந்த பகுதிக்கு செல்ல தடை விதிக்க வேண்டும் எனக்கூறி அறிக்கையை நாயரிடம் சமர்ப்பித்தார்.

நாயரும் அந்த அறிக்கையின் அடிப்படையில் இஸ்லாமியர்கள் அங்கு செல்ல 500 மீட்டர் சுற்றளவுக்கு தடை விதிக்கின்றார். (இந்த தடை உத்தரவை இன்று வரை அரசாங்கத்தாலோ, நீதிமன்றத்தாலோ நீக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது).

இதைக்கேட்ட நேரு கொந்தளிக்கின்றார். உடனடியாக ராம் லல்லாவிலிருந்து ஹிந்துக்களை யும், குழந்தை ராமரையும் வெளியேற்ற உத்தர விடுமாறு மாநில அரசை நிர்பந்திக்க, மாநில முதலமைச்சர் கோவிந்த் வல்லப பந்த் அவர்கள் நாயர் அவர்களுக்குஉடனடியாக ஹிந்துக்களை, வெளியேற்றுமாறும், குழந்தை ராமரை அகற்று மாறும் உத்தரவிடுகிறார்.

ஆனால் உத்தரவை அமல்படுத்த மறுத்த நாயர் அவர்கள் மேலும் ஒரு உத்தரவையும் இடுகிறார்.

குழந்தை ராமருக்கு தினசரி பூஜை செய்யவும், பூஜைக்கு ஆகும் செலவையும், பூஜை செய்யும் அர்ச்சகருக்கான சம்பளத்தையும் அரசே ஏற்க வேண்டும் என்பதே அந்த உத்தரவு.

இந்த உத்தரவை கேட்டு மிரண்டு போன நேரு அவர்கள் உடனடியாக இவரை பணியிலிருந்து நீக்க உத்தரவிடுகிறார்.

பணியிலிருந்து நீக்கப்பட்ட நாயர் அவர்கள் அலகாபாத் (தற்போது ப்ரயாக்ராஜ்) நீதிமன்றம் சென்று தானே அரசுக்கு எதிராக (அதாவது நேருவுக்கு எதிராக) வாதிட்டு வெற்றியும் காண் கின்றார்.

நீதிமன்றம் அவரை அதே இடத்தில்பணியாற்ற அனுமதித்து உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் உத்தரவு நேருவுக்கு கரியை பூசியது போல இருந்தது. இந்த உத்தரவை கேட்ட அயோத்யா வாசிகள் அவரை தேர்தலில் நிற்க வலியுறுத்தினர்.

ஆனால் நாயர் அவர்களோ, நான் அரசு ஊழியன். தேர்தலில் நிற்க கூடாது என சொல்ல நாயரின் மனைவியை நிற்க வைக்க அயோத்யா வாசிகள் வற்புறுத்தினர். மக்களின் வேண்டு கோளுக்கிணங்க அவர் உத்திரபிரதேச முதல் சட்டமன்ற தேர்தலில் அயோத்யா வேட்பாளராக திருமதி சகுந்தலா நாயர் களமிறக்கப்பட்டார்.

அந்த கால கட்டத்தில் காங்கிரஸ் சார்பில் நின்ற வேட்பாளர்களே நாடு முழுவதும் வெற்றி பெற்றனர். ஆனால் அயோத்யா தவிர. அயோத்யாவில் மட்டும் நாயர் மனைவி திருமதி சகுந்தலா நாயரை எதிர்த்து போட்டி யிட்ட காங்கிரஸ் வேட்பாளர் பல ஆயிரம் வித்தியாசத்தில் தோல்வி யை தழுவினார்.

திருமதி சகுந்தலா நாயர் 1952ல் ஜனசங்கத் தில் உறுப்பினராக சேர்ந்து ஜனசங்கத்தை வளர்க்க ஆரம்பித்தார்.

கடும் அதிர்ச்சி அடைந்த நேருவும்,காங்கிர ஸாரும் நாயர் அவர்களுக்கு கடும் நெருக் கடியைக் கொடுக்க ஆரம்பித்தனர். நாயர் அவர்களும் தன் பதவியை இராஜினாமா செய்து அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்ற தொடங்கினார்.

அந்த நேரம் 1962 வது வருடம் 4 வது பாராளுமன்றத்துக்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட சமயம், மக்கள் இவரிடம் வந்து அவசியம் தேர்தலில் நின்று பாராளுமன்றத்துக்கு சென்று நேருவுக்கு முன்பு அயோத்யாவை பற்றி பேச

e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர்





e-magazine
aanmeegamalar.com

வேண்டும்? என வற்புறுத்தி இவரையும், இவரின் மனைவியையும் தேர்தலில் நிற்க வைத்து, வெற்றி பெறச்செய்து, சரித்திர சாதனை படைத்தனர்.

1962–ல் பாராளுமன்றத்திற்கு பஹ்ரைச், மற்றும் கைசர்கஞ்ச் என இரண்டு தொகுதிகளிலும் நாயர் தம்பதிகளை மக்கள் வெற்றி பெறச் செய்தனர்.

மேலும் ஓர் இன்ப அதிர்ச்சியாக இவரின் ஒட்டுநரை பைசலாபாத் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பினர்.

ஆனால். அடுத்து இந்திரா ஆட்சியில் நெருக்கடி நிலையை அமல்படுத்தி தம்பதிகள் இருவரையும் கைது செய்து சிறையில் அடைத் தது. ஆனால் இவர்களின் கைது அயோத்யா ஹிந்துக்களிடையே பெரிய எழுச்சியை ஏற் படுத்த, பயந்து போன இந்திரா அரசு இவர்களை சிறையில் இருந்து வெளியே அனுப்பினார். தம்பதிகள் அயோத்யா வந்து மக்கள் பணியை தொடர்ந்து செய்தனர்.

1952–லிருந்து இப்பொழுது வரை அயோத்யா சம்பந்தப்பட்ட சட்டமன்ற தேர்தலிலும், பாராளு மன்ற தேர்தலிலும் பா.ஜ.கவே வெற்றி பெற்று வருகிறது (ஒன்றோ, இரண்டோ தேர்தலை தவிர)

அயோத்யா வழக்கை சுதந்திரத்திற்கு பின் கையாண்டவர் முதலில் நாயர் அவர்களே. முழுக்க இவரே கையாண்டார், இவர் அதிகாரியாக இருந்து போடப்பட்ட உத்தரவை இன்று வரை ஹிந்து விரோதிகளால் மாற்றவே முடியவில்லை.

அந்த உத்தரவின் அடிப்படையிலேயே பூஜைகளும், மக்களின் குழந்தை ராமர் தரிசனமும் இன்று வரை தொடர்ந்து நடந்து வருகிறது.

திரு நாயர் 1976 ஆம் ஆண்டு தன் சொந்த ஊருக்கு போக வேண்டும் என மக்களிடம் வேண்ட மக்கள் வேண்டாம் இங்கேயே இருங்கள் எனக்கூறினர். அதை மறுத்த நாயர் என் கடைசி காலம் என் சொந்த ஊரில் இருப்பதையே விரும்புகிறேன் எனச்சொல்லி மக்களிடமிருந்து விடை பெறுகிறார்.

1977 செப்டம்பர் 7 ஆம் தேதி தன் சொந்த ஊரிலேயே ஶ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் பாதக் கமலங்களில் சரணாகதி அடைந்தார். இவரின் இறப்பை கேட்ட அயோத்யா வாசிகள் கண்ணீர் விட்டு கதறினர். இவரின் அஸ்தியை பெற கேரளாவுக்கு ஒரு குழு சென்றது.

அஸ்தியை மிகுந்த மரியாதையுடன் பெற்று, அதை சாரட் வண்டியில் அலங்காரம் செய்து அயோத்யா ஶ்ரீ ராமன் தினசரி நீராடி, சூரியனை வழிபட்ட சரயுவில் கரைத்து வழிபட்டனர்.

அவரது சொந்த கிராமத்தில் விஸ்வ ஹிந்து பரிஷத் நிலம் வாங்கி அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்துள்ளது. ஶ்ரீ கே.கே.நாயர் என்கின்ற பெயரில் அறக்கட்டளை ஆரம்பித்து சிவில் சர்வீஸ் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகையும், பயிற்சியும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

நாயர் அவர்களின் முயற்சியாலேயே அயோத்யா ஶ்ரீ ராம ஜென்ம பூமியில் நம்மால் வழிபாடு நடத்த முடிந்தது, அவர் நிச்சயமாக தெய்வாம்சம் பொருந்திய நபராகவே அயோத்யா வாசிகளால் பார்க்கப்படுகிறார்.

**இவர் இல்லாவிட்டால் இன்று இராம ஜென்ம பூமி நம்மிடம் வந்திருக்குமா? என்பது கேள்விக்குறியே! இன்று நமக்கு ஶ்ரீராம ஜென்ம பூமியை நமக்கு கொடுத்த ஶ்ரீ கே.கே.நாயர் அவர்களின் புகழ் திக் கெட்டும் ஒலிக்கட்டும்.**


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
FREE
170 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
eBook
FREEDOWNLOAD
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# 531 ஆண்டுக்குப்பின் செருப்பு தலைப்பாகை அணியும் மக்கள்



531 ஆண்டுகளுக்குப் பிறகு செருப்பு மற்றும் தலையில் துண்டு கட்ட போகும் சத்ரிய வம்ச குடும்பங்கள், நம் இந்தியாவில்.

ஜனவரி 22 அன்று அயோத்தியில் ஸ்ரீ ராமர் பிறந்த, அதே இடத்தில் அவரின் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அன்று வேறொரு முக்கியமான சம்பவம் நடக்க உள்ளது.

அயோத்தியை சுற்றியுள்ள 15 கிராமங்களில் வசிக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சூரிய வம்ச சத்திரிய வம்சாவழியினர், 531 ஆண்டுகளுக்குப் பிறகு, முதல்முறையாக செருப்பு மற்றும் தலையில் துண்டு கட்ட உள்ளனர்.

இஸ்லாமிய மன்னர் ஆட்சியில், ஸ்ரீ ராமர் ஆலயம் அமைந்த ராமஜென்ம பூமி ஆலயம் இடிக்கப்பட்ட போது, அதை காப்பாற்ற வீரமாக போரிட்ட இந்த சூரிய குல சத்திரிய வம்ச வீரர்கள், தங்களது வீரத்தை மீறி அக்கோவில் இடிக்கப்பட்டதால் மிகவும் மனம் வருந்தினர்.

மீண்டும் இதே இடத்தில் ராமர் கோவில் கட்டப்படும் வரை, நாங்கள் தலையில் துண்டு கட்டமாட்டோம், செருப்பு அணிய மாட்டோம், குடை பயன்படுத்த மாட்டோம் என்று அனைத்து சூரிய வம்ச சத்திரியர்களும் சபதம் செய்தனர்.

தங்கள் முன்னோர்கள் போட்ட சபதத்தை மீறாமல், ஐந்து நூற்றாண்டுகளாக இந்த சூரிய வம்ச சத்திரிய குடும்பங்கள், தங்கள் கல்யாண காலங்களில் கூட செருப்பு, தலைக்கட்டு, குடை பயன்படுத்தாமல் வாழ்ந்து காட்டினர். இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

இப்போது அனைத்து கிராமங்களிலும் சூரியவம்சம் சத்திரியர்களுக்கு, ராமர் கோவில் கும்பாபிஷேகம் நடக்கும் 22ஆம் தேதி அன்று அணிந்து கொள்வதற்காக புதியதாக தலைக் கட்டு தயாரிக்கப்பட்டு கிராமம் கிராமமாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களது தியாகமும் கட்டுப்பாடும் வேண்டுதலும் ஜனவரி 22 அன்று நிறைவேறப் போகிற மகிழச்சியில் கிராமத்தினர் மகிழ்ச்சி வெள்ளத்தில் உள்ளனர்.

**எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அதர்மம் தலை தூக்கினாலும் தர்மமே வெல்லும் என்பதன் எடுத்துக்காட்டு இந்த நிகழ்வு.**

# வக்கீல்களின் வாதமும் தியாகமும்



ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த முது பெரும் வழக்கறிஞர் 96 வயதான சட்ட நிபுணர் கர்ம யோகி, பத்மபூஷண் கே.பராசரன்.

அயோத்தி வழக்கில் வெற்றி தேடி தந்த இவர், இந்த வழக்கிற்காக செய்த தியாகம் அதிகம், தொழில் பக்தி ஒருபக்கம் ராமபிரானின் மீதிருந்த பக்தி மறுபக்கம், இவர் வழக்காடும்போது வயதைக் கருத்தில் கொள்ளாமல் நின்று கொண்டே வாதாடினார்.

அயோத்தி நிலம் யாருக்கு சொந்தம்? என்பது தொடர்பான வழக்கில் ராம்லல்லா சார்பில் வாதாடியவர்களில் பிரபல சட்ட நிபுணர் கே.பராசரன் முக்கியமானவர்.

ஒரு நாள் வழக்கு விசாரணையின் போது அவரிடம் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், “உங்கள் வயதுக்கு மதிப்பளித்துச் சொல்கிறேன். ஒரு நாற்காலி போடச் சொல்கிறேன். அமர்ந்து வாதங்களைச் சொல்லுங்கள்” என்றார்.

அதற்கு, **“வக்கீல் நின்று வாதிடுவது தான் முறை. என் ராமனுக்காக நிற்பேன். நிற்க இயலாது போனால் நீதிமன்றம் வருவதை நிறுத்திக் கொள்வேன்”** என்று சொல்லி, 92 வயதிலும் நின்றுகொண்டே வாதாடினார்.

இந்த வழக்கில் அவர் ஒரு ரூபாய்கூட ஊதியம் பெற்றுக்கொள்ளவில்லை. இதுவே தனது கடைசி வழக்கு என்றும் அறிவித்திருந்தார்.

அயோத்தி வழக்கின் நியாயமான தீர்ப்புக்கு உறுதுணையான தெளிவான, உறுதியான வாதங்களை கே.பராசரன் முன்வைத்த போது, உடன் பக்கபலமாக வாதாடினார் மூத்த வழக்கறிஞர் சி.எஸ்.வைத்தியநாதன். இவர் வழக்கு நடைபெற்ற 40 நாட்களும் காலணி அணியவில்லை.

# ஸ்ரீ ராம ஜென்ம பூமிக்காக 27 வருடம் உணவு உட்கொள்ளாமல் இருந்தவர்



ஊர்மிளா சதுர்வேதி (81) சம்ஸ்க்ருத ஆசிரியை. மத்திய பிரதேசம் ஜபல்பூர்ரைச் சேர்ந்தவர். 1992 கரசேவைக்குப் பிறகு ஸ்ரீ ராம ஜென்ம பூமியை மீட்டிடும் வரை உணவு உட்கொள்ள மாட்டேன் என்று சபதம் எடுத்தவர்.

தினசரி சிறிது பழமும், பாலும்மட்டும் 27 வருடங்களாக உட்கொண்டு வந்தவர். 2019 இல் உச்ச நீதிமன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கிய பிறகு தனது சபதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர். அயோத்தியில் ஸ்ரீ ராம் லல்லாவை தரிசனம் செய்திடக் காத்திருக்கிறார்.

ஸ்ரீ ராம ஜென்ம பூமியில் ராம் லல்லா விற்கு ஆலயம் அமைந்திட வேண்டும் என்று லட்சக் கணக்கான மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவுள்ளது.

e-magazine
aanmeegamalar.com

# இதைப் படியுங்கள்
# 108 முறை ராமநாமம் கூறிய பலன் கிடைக்கும்



தசரதன் ஒரு சிறந்த ராஜ குமாரராம்
அவரது தர்ம பத்தினிகள் மூவராம்
பலநாள் பிள்ளைப் பேறு இன்றித் தவித்தாராம்
புத்திர காமேஷ்டி யாகம் ஒன்றைச்
செய்தாராம்
நிவேதனப் பாயசம் துணைவிகள்

அருந்தினராம்
அதன் பலனாய் மகவு நால்வரைப்
பெற்றனராம்
கோசலையின் தவப் புதல்வன்
ஸ்ரீராமச்சந்திரராம்
கைகேயி மகன் பரதன் என்பவராம்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்





சுமத்திரை ஈன்றது லஷ்மண சத்ருக்னனராம்
நால்வரும் படிக்கக் குருகுலம் சென்றராம்
பிள்ளைகளின் குரு விஸ்வாமித்ர முனிவராம்
நால்வரும் ஆய கலைகள் நன்கு கற்றனராம்
முனிவர் யாகம் ஒன்று நடத்தினாராம்
அதில் தடைகளை ராட்சதர்கள் புரிந்தனராம்
இவர்களின் செயல்களைஅடக்க
நினைத்தாராம்
ராம லஷ்மணனைக் கூட்டிப்போக
வேண்டினாராம்
தசரதன் மகன்களை அனுப்பத் தயங்கினாராம்
பின்னர் முனிவரின் விருப்பம் ஏற்றாராம்
காட்டில் ராட்சதர்கள் அதர்மம் செய்தனராம்
ராமர் அவர்களை அடக்கி அழித்தாராம்
மன்னன் பிள்ளைகளின் வீரம் கேட்டாராம்
மனதில் மட்டற்ற உவகை அடைந்தாராம்
ஜனகன் மிதிலை தேசத்து மன்னவராம்
நிலத்தை உழுகையில் சீதையைக்
கண்டவராம்
மகளைப் பண்புடன் அழகாக வளர்த்தாராம்
சீதையின் மாளிகையில் சோதரிகளும்
நால்வராம்
சீதைக்கு சுயம்வரம் தந்நை நடத்தினாராம்
சிவ தனுசை ஒடிக்க நிபந்தனை விதித்தாராம்
முனிவரின் ஆசியுடன் ராமரும் சென்றாராம்
மிதிலையில் சீதையை மாடத்தில் பார்த்தாராம்
அண்ணலும் அவளும் ஒன்றாய் நோக்கினராம்
வில்லை எடுத்தது கண்டு இற்றது
கேட்டனராம்
மிதிலை மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தனராம்
ராமரும் ஜனகனின் மருமகன் ஆனாராம்

சீதா ராமன் ஆனந்தமாக வாழ்வைத்
துவக்கினாராம்
மகனுக்குப் பட்டமளிக்க மன்னவன்
நினைத்தாராம்
அரசவையைக் கலந்து நல்ல நாள்குறித்தாராம்
மக்களிடம் மகிழ்ந்து விழா குறித்துக்
கூறினாராம்
அனைவரும் அழகிய தோரணங்கள்
கட்டினராம்
பட்டாபிஷேகம் காண ஜனங்கள் ஏங்கினராம்
கைகேயியின் ஆருயிர்த் தோழி கூனி
என்பவராம்
அவளது போதனையால்
கைகேயி மனம் மாறினாராம்
கணவன் தசரதனைக் கண்டு வெகுண்டாராம்
முன்னரே தான் கேட்ட இரு வரம் பற்றிக்
கூறினாராம்
ஒன்றின்படி தன் மகன் பரதன் மன்னவராம்
அடுத்தது ராமன் வனம் புக விழைந்தாராம்
மனைவியின் வாக்கினை தசரதன் ஏற்றாராம்
புத்திரனைப் பிரிந்த சோகத்தில் ஆழ்ந்தாராம்
சீதை தானும் கணவருடன் வனம் வருவேன்
என்றாராம்
லஷ்மணன் ராமனைப் பிரிய மறுத்தாராம்
சீதா ராமனுடன் தானும் கானகம்
தொடர்ந்தாராம்
வழியில் ஆற்றைக் கடக்க குகன்
படகோட்டினாராம்
ராமன் குகனையும் தம்பியாக ஏற்றாராம்
கானகம் செல்லும் வழியிலே அகலிகை
சாபம் தீர்த்தாராம்


பஞ்சவடி ஆசிரமத்தில் அனைவரும்
தங்கினராம்
காட்டில் சூர்ப்பனகை எனும் ராட்சசி ஒருத்தி
கண்டனராம்
லஷ்மணன் ராட்சசியின் மூக்கை அறுத்தாராம்
மூக்கறுபட்டவள் அலறி அண்ணனிடம்
சென்றாராம்
சீதையின் அழகைக் கூறி அண்ணனை
மாற்றினாராம்
சிவ பக்தியில் இணையில்லா இராவணன்
இலங்கை மன்னராம்
சீதை மேல் தணியாத காதல் கொண்டாராம்
வனத்தில் சீதையைத் தொட நினைத்தாராம்
சாபம் இருந்ததால் தொலைவில் நின்றாராம்
மாயமானை அனுப்பி ராமரைப் பிரிக்க
நினைத்தாராம்
பொன்மானைக் கண்ட சீதா
பிடித்துத் தரக் கேட்டாராம்
ராமன் மறுக்க சீதை
கணவரைக் கேலி செய்தாராம்
மானைப் பிடிக்க ராமன் போக
அபயக் குரல் கேட்டனராம்
தம்பியை உடன் செல்ல சீதா கட்டளை
இட்டாராம்
மீறின இலக்குவனை சீதை கடிந்து
கொண்டாராம்
மனமின்றி இலக்குவன் கோடு ஒன்றை
வரைந்தாராம்
கோட்டைத் தாண்டாதிருக்க அண்ணியை
வேண்டினாராம்
அண்ணி சொல்லால் தம்பி ராமனைத் தேடிச்
சென்றாராம்
ராவணன் பர்ணசாலையோடு
சீதையைக் கவர்ந்தாராம்
வழியில் பறவை ராஜா ஜடாயு போர்
தொடுத்தாராம்
போரில் தன் இரு சிறகையும் இழந்தாராம்
தசமுகன் சீதையை இலங்கையில் சிறை
வைத்தாராம்
சீதையைப் பிரிந்த ராமன் துவண்டாராம்
ஜடாயு கொடுத்த ஐடைவில்லை பெற்றாராம்
சீதையைக் கொண்டு சென்ற
ராவணன் பற்றி அறிந்தாராம்
உயிர் துறந்த ஜடாயுவிற்கு
ஈமக் கிரியைகள் செய்தாராம்
தேறுதல் சொன்ன வானரர்களை மதித்தாராம்
சுக்ரீவன் அண்ணன் வாலி என்பவராம்
அத்துமீறி அட்டகாசம் மிகப் பல செய்தவராம்

சுக்ரீவன் மனம் மகிழ வாலியைக்
கொன்றாராம்
சீதையைத் தேடி வர வானரங்களை
அனுப்பினாராம்
வானரக் கூட்டத்தில் அனுமன் என்று
ஒருவராம்
ராம நாமத்தையே தனது மூச்சாக
வாழ்ந்தவராம்
சீதையைக் காணக் கடல் தாண்டிச்
சென்றவராம்
இலங்கையில் சீதம்மாவை
அசோக வனத்தில் பார்த்தாராம்
சீதை ராமனிடையே நடந்த உரையாடலைச்
சொன்னாராம்
மகிழ்ந்த சீதை கொடுத்த
கணையாழியைப் பெற்றாராம்
இலங்கையில் தசமுக ராவணனைக்
கண்டாராம்
தன் வாலில் வைத்த தீயால்
இலங்கையை எரித்தாராம்
கண்டேன் சீதையை என்று
ராமனிடம் உரைத்தாராம்
வானரப் படைகள் கடலில் பாலம்
அமைத்தனராம்
ராமன் தம்பியுடன் இலங்கை சென்றாராம்
படைகளுடன் இலங்கையை முற்றுகை
இட்டாராம்
தம்பி கும்பகர்ணன் செஞ்சோற்றுக் கடனால்
மாண்டாராம்
ராவணன் தம்பி விபீஷணன் என்பவராம்
அண்ணனின் தகாத செயலை வெறுத்தவராம்
அதனால் ராமனிடம் சரண் அடைய
நினைத்தாராம்
சரண் அடைந்த எதிரியை ராமன் ஏற்றாராம்
போரில் ராவணன் அனைத்தும் இழந்தாராம்
இன்று போய் நாளை வா என்ற ராமன் சொல்
கேட்டாராம்
இறுதியில் ராமனால் வானுலகை எய்தினாராம்
ராமன் சீதையுடன் தம்பி
உடன்வர அயோத்தி வந்தாராம்
சீதா ராமனாகப் பல்லாண்டு
அயோத்தியை ஆண்டாராம்
ராம ராம ஜெய ராஜாராம்
ராம ராம ஜெய சீதாராம்
இதை முழுவதுமாக படித்து விட்டீர்களா.
இன்று 108 முறை ராம நாமம்கூறியுள்ளீர்கள்,

**ராமநாமத்தை கூறிய உங்களை**
**அனுமன் ரட்சிப்பாராம்**

# வாழ்க்கையில் பல்வேறு காலகட்டங்களில் பயன்தரும்

# இராமாயண நிகழ்வுகள்







எளிதில் ஏமாந்து போகாதவனாகவும், தனது இந்திரியங்களை அடக்கியவனாகவும், ராஜ நீதியை உணர்ந்தவனாகவும், நாட்டின் நடப்பை அறிந்தவனாகவும், எந்த ஒரு மன்னன் திகழ்கிறானோ அவனே நீண்ட காலம் ஆட்சி புரிகிறான். தன்னுடைய இரு கண்களை மூடிக் கொண்டு அவன் உறங்கிக் கொண்டிருக்கும் போதும், ராஜநீதி என்ற அவனுடைய கண் விழித்துக் கொண்டிருந்து அவனைக் காப்பாற்று கிறது. அப்படிப் பட்ட மன்னனே மக்களால் கொண்டாடப்படுகிறான்.

- (**சூர்ப்பனகை, ராவணனிடம் கூறுவது**)

தங்களுடைய கௌரவத்தை மதிப்பவர்கள், திருமணமாகாத பெண் வீட்டில் இருப்பதால் கவலை கொள்கிறார்கள். தாய் வீடு, தந்தை வீடு, தான் கைப் பிடிக்கப்போகும் கணவரின் வீடு ஆகிய மூன்றுக்குமே அவப்பெயர் உண்டாக்கி விடக் கூடிய தன்மை நிறைந்தவள், திருமண மாகாத பெண்.

(**ஸுமாலி, தன் மகள் கைகஸியிடம் கூறுவதாக, அகஸ்தியர் ராமரிடம் கூறுவது**)

தாய், தந்தை, ஆச்சார்யன் ஆகியோரை நிந்திப்பவன் அதற்குரிய விளைவை அனுபவித்தே தீர வேண்டும். ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டை யும் கடைப் பிடிக்காதவன் இறுதியில் அதற்கான பலனை அனுபவித்து தீர வேண்டும். வினை விதைத்தவன், வினை அறுப்பான், பாவத்தின் பலன் துன்பம்.

( **குபேரன், தசக்ரீவனிடம் கூறுவது**)





தீய எண்ணம் கொண்டவனாகவும்,கட்டுக் கடங்காதவவனாகவும், பாவிகளை ஆலோசகர் களாகக் கொண்டவனுமாக ஒரு மன்னன் இருந் தால், அவன்தன்னையும் அழித்துக் கொள்வான், தன்னைச் சார்ந்தவர்களையும் அழிப்பான். தன் நாட்டின் அழிவிற்கும் அவனே காரணமாவான்.

**(மாரீசன், ராவணனிடம் கூறுவது)**

தன்னிடம் அபிப்பிராயம் கேட்கப்படும் போது இரு கை கூப்பி, பணிவுடன் தன் கருத்தைக் கூறுகிறவனே ஓர் அரசனுக்குரிய நல்ல ஆலோ சகன் ஆவான். ஓர் அரசன் முன்னிலையில் அர்த்தமுள்ள கருத்துக்களைக் கூறும்போது கூட, பேச்சில் பணிவிருக்கவேண்டும். பேசப் படுகிற வார்த்தைகளில் நல்ல அர்த்தம் இருந்தா லும், அவை பேசப் படுகிற தொனியில் ஏளனம் இருந்தால், அவற்றைக் கூறுகிற மனிதனை எந்த மன்னனும் மதிக்க மாட்டான். அரசர்களுக்குஐந்து உருவங்கள் உண்டு. அக்னிதேவன், இந்திரன், சந்திரன், எமன், வருணன் ஆகிய ஐவரின் அம்சங்கள் அரசனிடம் அடங்கி இருக்கின்றன. இதையொட்டியே அரசர்கள் வெவ்வேறு சமயங் களில் சுட்டெரிக்கும் தன்மை, வீரம், மென்மை, தண்டனை அளிக்கும் தன்மை, இதயமளிக்கும் தன்மை ஆகியவற்றை வெளிக் காட்டுகிறார்கள்.

**(ராவணன், மாரீசனிடம் கூறுவது)**

அரசனை எதிர்ப்பவன், நல்ல படியாகத் தன் வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியாதவனாகி றான்.

**(ராவணன், மாரீசனிடம் கூறுவது)**

காமத்தினால் பீடிக்கப் பட்ட மன்னன்,தீய வழிகளை நாடும் பொழுது, அவனைத்தடுத்து நிறுத்துவதே அமைச்சர்களின் கடமை. நற் குணமும், புகழும் அரச பதவியில் தான் வேரூன்றி இருக்கின்றன. அரசன்தறிகெட்டு அலைந்தால், அவன் ஆட்சிக்கு உட்பட்டராஜ்யத்தில் உள்ள மக்களும் அதே கதியை அடைகிறார்கள். கொடு மையான வழிகளினால் ஒரு ராஜ்யத்தைத் திறமையாக ஆள முடியாது. கரடு முரடான பாதையில் கண்மூடித் தனமாகத்தேரைச் செலுத்தி, அதைக் கவிழ்த்து அழித்து விடுகிற தேரோட்டி போல, தவறான வழியில் அரசனை இட்டுச் செல்கிற அமைச்சர்கள், ராஜ்யத்தின் அழிவுக்குக் காரணமாகிறார்கள். வன் முறையி லும், தீய வழிகளிலும், நாட்டமுடைய மன்னனால் ஆளப் படுகிற மக்கள், நரியினால் பாதுகாக்கப் படுகிற ஆடுகள் போன்றவர்களே!

**(மாரீசன், ராவணனிடம் கூறுவது)**

அழிவை நெருங்கி விட்ட, மனிதர்கள் நல்ல நண்பர்களின் உயர்ந்த அறிவுரைகளைச் செவி மடுப்பதில்லை என்பது உலக நியதி.

**(மாரீசன், ராவணனிடம் கூறுவது)**

கடும் மொழிகளை ஒரு பெண் பேசுகிறாள் என்பது வியப்புக்குரியது அல்ல. இது பெண் களின் இயற்கை என்பது உலக அனுபவத்தில் கண்டறியப் பட்ட உண்மை. நெறிமுறைகளைக் காற்றிலே எறிந்து மனதை ஒரு நிலையில் நிறுத் தாமல், கொடுமையுடன் நடந்து கொண்டு , உறவுகளிலே பிரிவினைகளை ஏற்படுத்துபவர்கள் பெண்கள்.

**(லக்ஷ்மணன், ஸீதையிடம் கூறுவது)**

தீய காரியத்தின் பலன், உடனே கண்ணுக்குத் தெரிவது இல்லை. காலத்தினால் பழுக்கும் தானியங்கள் போல, தீய காரியமும் கூட உரிய காலத்தில் பலனைத் தந்துவிடும்.

**(ஸீதை ராவணனிடம் கூறுவது)**

மாற்றான் மனைவியைத் தீண்டுபவனுக்குப்

பெரும் கேடுகள் நேரும். மற்ற மனிதர்களால் இகழத் தக்க காரியத்தை, எந்த ஒரு மனிதனும் செய்யக் கூடாது. மற்றவர்கள் தீண்டாத வண்ணம் தன் மனைவியைக் காப்பாற்றுவது போலவே, பிறர் மனைவிகளையும் கூட ஒருவன் காப்பாற்ற முனைய வேண்டும்.

(**ஸீதை, ராவணனிடம் கூறுவது**)

ஓர் அரசன் எவ்வகையான நெறிமுறைகளைப் பின்பற்றுகிறானோ, அவ்வகையான நெறிமுறை களையே மக்களும் பின் பற்றுகிறார்கள். அதனால் தான், நன்மையும் சரி, தீமையும் சரி அரசனிடமே நிலை பெற்று அவனிடமிருந்தே பரவுகின்றன.

(**ஸீதை, ராவணனிடம் கூறுவது**)

அழிவு காலத்தை நெருங்கி விட்ட மனிதன், வழி தவறி நடந்து கொள்கிறான்.

(**ஸீதை, ராவணனிடம் கூறுவது**)

மன உறுதி உள்ளவர்கள் இதயச்சோர்வு அடைவதில்லை. செய்து முடிப்பதற்குக் கடினமான காரியங்களை முற்கொள்ளும் போது மனத் தளர்ச்சி அடையக் கூடாது.

(**லக்ஷ்மணன், ராமரிடம் கூறுவது**)

கொடுமை நடக்கும்போது, கருணை காட்டிக் கொண்டு பேசாமல் இருந்தால், பரமசிவனையே கூட உலகம் இகழும்.

(**ராமர், லக்ஷ்மணனிடம் கூறுவது**)

பாய்ந்து வருகிற தீயைப்போல், மனிதனை நெருங்குகிற துன்பம் திடீரென ஒரு நொடியில் மறைந்து விடும் தன்மை உடையது. துன்பங்களைச் சந்திக்காத ஜீவராசி ஒன்று உண்டா? எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளும் பூமாதேவி மீது, எரிமலை வெடிக்கிறது, பேரொளி படைத்த சூரியனும், குளிர் நிலவும் ஞ்ரீ கிரஹணத்தினால் பீடிக்கப் படுகின்றன. விதியின் வசத்திற்குயாருமே விலக்கல்ல.

(**லக்ஷ்மணன், ராமரிடம் கூறுவது**)

நன்மை, தீமைகளை ஆராய்ந்து செய்யப் படாத காரியம் நிலையாக நிலைத்து நிற்கக் கூடியது அல்ல. ஆனால் அக்காரியத்தின் விளைவோ தவிர்க்க முடியாதது. பேரறிவாளர்கள் ஒரு காரியத்தின் நன்மை தீமையை ஆராய்ந்த பிறகு தான் அதில் இறங்குகிறார்கள்.

(**லக்ஷ்மணன், ராமரிடம் கூறுவது**)

விதியின் விளைவைஎந்த ஜீவராசியாலும் விலக்க முடியாது. விதியை மீறக் கூடியவன்



எவனும் இல்லை. சிறந்த வீரர்களாயினும் சரி, அஸ்திர வித்தையில் நிபுணர்களாயினும் சரி, விதியை வெல்ல முடியாமல், மணலால் கட்டப் பட்ட அணைகள் பெரும் வெள்ளத்தில் கரைவது போல, கரைந்து விடுகிறார்கள்.

(**ராம, லக்ஷ்மணனிடம் கூறுவது**)

மிகக்கொடிய துன்பத்திற்கு ஆளாகிறவனுக்குத் தேவையான உதவி, அதே போன்ற துன்பத்தை அனுபவித்த மற்றொருவனிடம் தான் கிட்டும்.

(**கபந்தன் என்கிற அரக்கன், ராமரிடம் கூறுவது**)

முயற்சி இல்லாமல் எந்தக் காரியமும், சாதிக்கப் படுவது கிடையாது. மிகவும் சக்தி வாய்ந்தது முயற்சியே. முயற்சியுடைய மனிதனுக்கு அடையப் பட முடியாதது என்று எதுவும் இல்லை

(**லக்ஷ்மணன், ராமரிடம் கூறுவது**)


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

பிரிவினாலோ, பொருளை இழப்பதாலோ ஆபத்தில் சிக்குவதாலோ, உயிர் போகிற சூழ்நிலை ஏற்படுவதாலோ, உண்டாகிற மனக் குழப்பத்திற்கு அடிமையாகாமல், அறிவைக் கொண்டு சரியான வழி முறையை ஆலோசித்துச் செயல் படுபவன், மனத் தளர்ச்சி அடையாமல் இருக்கிறான். பிரச்னை ஏற்படும் பொழுது மனக் குழப்பத்திற்கு இடம் கொடுத்து, சோகத்தில் ஆழ்ந்து விடுபவன் அதிக சுமை ஏற்றப் பட்ட ஓடம் தண்ணீரில் மூழ்குவது புல துயரத்தில் மூழ்கி, அழிவு எய்துகிறான். சோகத்திலிருந்து விடுபடாதவர்களுக்கு, மன நிம்மதி என்பது கிடையாது. அவர்களுக்கு இயல்பாக உள்ள பலமும் குன்றிப்போய் விடுகிறது. மித மிஞ்சிய சோகத்தினால் ஒருவன் மரணத்தையும் கூட, தழுவி விடக் கூடும்.

ஆன்மிகமலர்

**(சுக்ரீவன், ராமரிடம் கூறுவது)**

மனதை அடக்குவதும், மன்னிக்கும்மனப் பான்மை உடைய வனாக இருப்பதும், சத்தி யத்தில் இருந்து தவறாதவனாக நடந்துகொள்வ தும், தீயவர்களைத் தண்டிக்கும் குண முடைய வனாக இருப்பதும் அரசனின் லட்சணங்கள். மனம் போன போக்கில் நடந்து கொள்வது மன்னர்களுக்கு அழகல்ல.

**(வாலி, ராமரிடம் கூறுவது)**

அரசனைக் கொல்பவன் பிராமணனைக் கொல்பவன், பசுவைக் கொல்பவன், உயிர்களை வாட்டுபவன், நாத்திகன் ஆகிய எல்லோருமே நரகத்திற்குச் செல்கிறார்கள், கருமி, காட்டிக் கொடுப்பவன், ஆச்சார்யனின் மனைவியை அடைய முயற்சிப் பவன், நண்பனையே கொலை செய்யத் துணிபவன் ஆகியோர் பெரும் பாவம் செய்தவர்களாக நரகத்தை அடைகிறார்கள்.

**(வாலி, ராமரிடம் கூறுவது)**

தமையன், தந்தை, ஆச்சார்யன் ஆகிய மூன்று பேரையுமே தர்ம வழியில் செல்பவன் தந்தை யாகக் கருதுகிறான். தம்பி, மகன், சீடன் ஆகிய மூவருமே மகனாகக் கருதப் படத் தக்கவர்கள். இந்த அணுகு முறைக்கு தர்ம சாத்திரங்களே ஆதாரம்.

**(ராமர், வாலியிடம் கூறுவது)**

# தீர்ப்பை கேட்க வந்த கருங்குரங்கு நீதிபதி நெகிழ்ச்சி

மசூதிக்குள் 1949ல் ஹிந்து பக்தர்களின் வழிபாட்டுக்குத் திறந்து விடும் உத்தரவை 1986ல் பிறப்பித்த பைஸாபாத் மாவட்ட நீதிபதி கே.எம்.பாண்டே, பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், 1991ல் தனது சுய சரிதையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

பூட்டியிருந்த கோயிலின் கதவை பக்தர்களின் தரிசனத்துக்குத் திறந்து விடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்த அந்த நாளன்று, எனது நீதிமன்ற அறையின் மேற்கூரையில் கொடி மரத்தைப் பற்றியபடி ஒரு கருப்புக் குரங்கு ஒன்று அமர்ந்திருந்தது.

அன்றைய தினம் தீர்ப்பு என்ன?

என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த பைஸாபாத், அயோத்தி நகரங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் குரங்குக்கு வேர்க்கடலை, பழம் முதலானவற்றைக் கொடுத்தனர்.

அந்தக் குரங்கோ அவற்றைத் தொடக்கூட இல்லை. மாலை 4.40க்கு நான் தீர்ப்பைப் படித்தவுடன் அந்தக் குரங்கு அங்கிருந்து சென்றது

பின்னர் எனது பாதுகாப்புக்காக வந் திருந்த மாவட்ட ஆட்சியரும் போலீஸ் கண்காணிப்பாளரும் என்னை எனது பங்களாவுக்கு அழைத்துச் சென்றனர்.

பார்த்தால், எனது பங்களாவின் தாழ்வாரத்தில் அமர்ந் திருக்கிறது அந்தக் குரங்கு.

எனக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. நிச்சயமாக ஒரு தெய்வீக சக்திதான் அந்த குரங்கு என்பதை உணர்ந்துகொண்டு அதனை வணங்கினேன்." அயோத்தி ராமன் அனைவருக்கும் இனியவன் என்ற கட்டுரை

– சுஜாதா தேசிகன் எழுதியது.
('வலம்' நவம்பர் 2017 இதழில்)

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

**ஆன்மிகமலர்.காம்**
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சார்பில் வெளியிடும்

**23.01.2024**
அன்று வெளிவரும்...

# தைப்பூசம் திருவிழா
# ஆறுபடையப்பன் சிறப்பிதழ்

**48 பக்கம்**

- ஆறுபடைமுருகன் ஸ்தலங்கள் சிறப்பு
- 12 ராசிக்குரிய முருகன் கோவில்கள்
- மூன்றாம் படைவீடு ரகசியம்
- முழங்கால் வலி தீர்க்கும் முருகன்
- பாதயாத்திரை துவங்கிய கோவில்





இந்த ஆண்டின் கிரிவல நாட்கள்,
பிரதோஷ நாட்கள், போன்றவற்றின்
தொகுப்பு கொண்ட பொக்கிஷம்
புத்தகம் தேவைப்படுவர்கள்,
விளம்பர முகவர்கள்
தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

**Ph:9994323622 / 9994162182**

9444228203